# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1626 - 2009 ඔක්තෝබර් 30 වැනි සිකුරාදා - 2009.10.30

*1626 ஆம் இலக்கம் – 2009 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 30 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) – பொது

*(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)*


| | பக்கம் |
|---|---|
| சனாதிபதியின் பிரகடனங்களும் பிறவும் | - |
| சனாதிபதியின் நியமனங்களும் பிறவும் | 1810 |
| அமைச்சரவையின் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| நீதிச்சேவை ஆணைக்குழுவின் நியமனங்களும் பிறவும் | - |
| மற்றைய நியமனங்களும் பிறவும் | 1810 |
| பதிவாளர் நியமனங்களும் பிறவும் | - |
| அரசாங்க அறிவித்தல்கள் | 1811 |
| விலைக் கட்டளைகள் | - |
| இலங்கை மத்திய வங்கியின் அறிவித்தல்கள் | - |
| இலங்கை அரசாங்க கணக்கு விபரங்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுக்கள் | - |
| அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள் | 1811 |
| மாலுமிகளுக்கு அறிவித்தல்கள் | - |
| மதுவரிக் கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |


**கவனிக்க.**– இவ்வர்த்தமானியின் பகுதி VI இல் யூரிமார் பட்டியலொன்று மும்மொழிகளிலும் பிரசுரிக்கப்படுகின்றது.

**கவனிக்க.**– (i) இலங்கை உழைக்கும் ஊடகவியலாளர் கழகம் (கூட்டிணைத்தல்) (திருத்தம்) சட்டமூலம் 2009, மே 29 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(ii) ரோஹித அபேகுணவர்தன மன்றம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் 2009, யூன் 05 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

(iii) கரையோரப் பாதுகாப்புத் திணைக்களம் ஒன்றைத் தாபிப்பதற்கான சட்டமூலம் 2009, யூன் 12 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்குக் குறைநிரப்பியாக பிரசுரிக்கப்படுகிறது.

**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

## முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தில், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் அறிவித்தல் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை – நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கான விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2009, நவெம்பர் மாதம் 06 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2009, ஒற்றோபர் மாதம் 23 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2009 ஆம் வருடம் சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# சனாதிபதியின் நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 323

**இலங்கை தொண்டர் வான்படை**

அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அனுமதிக்கப்பட்டு அதிகாரிகளாக நியமனமாதலும் பிரிவுகளுக்கு உள்ளடக்கப்படுதலும்

கீழே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள அதிகாரிகள் அவர்களது பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள திகதியிலிருந்து இலங்கை தொண்டர் வான் படையில் தற்காலிக ஸ்கொட்ரன் லீடர், ப்ளைட் லெப்டினன் நிலைகளுக்கு நியமனமாதலுக்கும் அதே திகதியிலிருந்து பெயருக்கு முன்னால் குறிப்பிடப்பட்டுள்ள பிரிவுகளுக்கு உள்ளடக்கப்படுதலுக்கும் அதியுத்தமராம் சனாதிபதி அவர்களால் அனுமதி வழங்கப்பட்டுள்ளது:-

| நிலை | முழுப்பெயரும் சேவை இலக்கமும் | பிரிவு | திகதி |
|---|---|---|---|
| தற்காலிக ஸ்கொட்ரன் லீடர் | வலிமுனி குமுது மெண்டிஸ் வீரசேகர (வீ/0509) | பல்வைத்தியம் | 19, யூலை 2007 |
| ப்ளைட் லெப்டினன் | நுவன் நிரஞ்ஜய அபயசிங்க (வீ/0506) | தொழில்நுட்ப இயந்திரவியல் | 19, சனவரி 2007 |
| ப்ளைட் லெப்டினன் | சமிந்த சம்பத் தேகம்பட (வீ/0507) | தொழில்நுட்ப இயந்திரவியல் | 19, சனவரி 2007 |
| ப்ளைட் லெப்டினன் | மனனகே தர்சன அதுபத்து (வீ/0508) | வான் நிலைய அமைப்பாளர் | 19, சனவரி 2007 |
| ப்ளையிங் ஒபிசர் | துவான் சமீர் செயினோ (வீ/0510) | பரிபாலன கல்வி | 19, சனவரி 2007 |

அதியுத்தமனாரின் ஆணைப்படி,

கோடாபய ராஜபக்ஷ,
ஆர்டப்பீ, ஆர்எஸ்பீ, பீஎஸ்சி,
செயலாளர்,
தேசிய பாதுகாப்பு, பொதுசன பாதுகாப்பு,
நீதியும் சமாதானமும் சம்பந்தமான அமைச்சு.

கொழும்பு,
2008.10.12.

10-966

---

# மற்றைய நியமனங்களும் பிறவும்

2009 இன் இல. 324

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் 1990 ஆம் ஆண்டின் திசெம்பர் மாதம் 07 ஆந் திகதிய வர்த்தமானப் பத்திரிகையின் II ஆவது பகுதியில் இணைப்பாக வெளியிடப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 46 ஆம் இலக்க கைத்தொழில் அபிவிருத்திச் சட்டத்தின் 1 ஆம் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள (1978 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க பெ. கொ. பொ. ஆ. சட்டத்தின்கீழ் வருகின்ற பிரதேச தொழில் முயற்சி மற்றும் அதிகாரமளிக்கப்பட்ட தொழில் முயற்சி தவிர்ந்த) இலங்கைக் கைத்தொழிலைப் பதிவு செய்வதற்குரிய நடவடிக்கைகளுக்காக அந்தச் சட்டத்தின் 27 ஆம் பிரிவின் 1 ஆவது உபபிரிவின் பிரகாரம் கைத்தொழில் பதிவாளராக கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சின் மேலதிகச் செயலாளர் அபிவிருத்திப் பதவியில் கடமை புரிகின்ற திரு. அசித குமார செனவிரத்ன அவர்களை இத்தால் நியமிக்கிறேன்.

ஆர். வீ. டீ. பியதிலக்க,
செயலாளர்,
கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு.

கைத்தொழில் அபிவிருத்தி அமைச்சு,
இல. 73/1, காலி வீதி,
கொழும்பு 03,
2009, ஒற்றோபர் 08.

10-1027

# அரசாங்க அறிவித்தல்கள்

ச. வ. பீ. 3/32

**இலங்கைப் புகையிரத நலன்புரிச் சங்கக் கட்டளைச்சட்டம்**

(285 ஆம் அத்தியாயமான) இலங்கைப் புகையிரத நலன்புரிச் சங்கக் கட்டளைச் சட்டத்தின் 15 ஆம் பிரிவின்கீழ் இலங்கைப் புகையிரத நலன்புரிச் சங்கத்தால் ஆக்கப்பட்டு, அப்பிரிவின்கீழ் நிதி அமைச்சரால் உறுதிப்படுத்தப்பட்ட விதிகள்.

செயலாளர்,
நிதி அமைச்சு.

கொழும்பு,

**விதிகள்**

1932, பெப்புருவரி மாதம் 12 ஆந் திகதிய 7906 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் வெளியிடப்பட்டு காலத்துக்காலம் திருத்தப்பட்டவாறான விதிகள் இத்தால் பின்வருமாறு மேலும் திருத்தப்படுகின்றன :-

**திருத்தியமைக்கப்பட்ட அமைப்பு விதிகள்**

1. 07 ஆவது ஒழுங்கு விதியின் (1) பந்தியின்படி தற்போது ரூபா 25.00 ஆக இருக்கும் அங்கத்துவ பணம் 07 ஆவது ஒழுக்க சட்டத்தின் (11ஏ) பந்தியிற்கு உட்சேர்த்தல்.

2. 24 ஆவது ஒழுக்க சட்டத்தில், 03 ஆவது பந்திக்குப் பதிலாக கீழே காட்டப்பட்டுள்ள பந்தியினை பதிலீடு செய்வதன் மூலம் 2008.03.18 ஆந் திகதியிலிருந்து அமுலாக்கப்படும் விதத்தில் வாக்களிப்பு செல்வாக்கினால் நியமிக்கப்பட்ட தலைவர் அவர்களுக்கு ரூபா 6,000.00 கொடுப்பனவு மேற்கொள்ள வேண்டியிருப்பதோடு அது ஒவ்வொரு ஆண்டிலும் நடைபெறும் வருட மகாசபை கூட்டத்தின்போதும் அனுமதிக்கு உட்படுத்தப்பட வேண்டும். உத்தியோகபூர்வமாக நியமிக்கப்படும் நிருவாக சபையினருக்கும், செயலாளருக்கும், பொருளாளர் உள்ளடங்கலாக நிருவாகக் குழு அங்கத்தவர்களுக்கும் தாங்கள் வருகைதந்த ஒவ்வொரு நிருவாக சபை கூட்டம் தொடர்பாகவும் ஒருவருக்கு ரூ. 300.00 எனும் விதத்தில் கொடுப்பனவு செலுத்தப்பட வேண்டும்.

3. 33 ஆவது ஒழுங்கு விதி கீழ்வருமாறு திருத்தியமைக்கப்பட வேண்டும் :-

(ஆ 1) 10 வருடத்திற்கு அதிகமான தொடர்ச்சியான அங்கத்துவத்தை உடைய அங்கத்தவர் ஒருவருக்கு இவ் ஆலோசனை முறையின் கீழ் ரூபா 50,000.00 கடன் தொகையாக கொடுக்கப்பட வேண்டும். இக் கடன் தொகையானது 60 தவணைகளில் மீண்டும் அறவிடப்பட வேண்டும். பிணையாளர்களாக ஒரு நபர் குறைந்தபட்சமாக 10 வருட தொடர்ச்சியான அங்கத்துவத்தை உடைய அங்கத்தவர் ஒருவர் உள்ளடங்களாக பிணையாளர்கள் இருவர் முன்வைக்கப்பட வேண்டும். பிணையாளர் ஒருவர் கடன் பெறும் இருவர்களுக்காக மட்டுமே பிணையாளராக செயற்பட முடியும்.

(ஆ2) 10 வருடத்திற்கு குறைந்த தொடர்ச்சியான அங்கத்துவத்தை உடைய அங்கத்தவர் ஒருவருக்கு இவ் ஆலோசனை முறையின்கீழ் ரூபா 25,000.00 கடன் தொகையாக கொடுக்கப்பட வேண்டும். இக்கடன் தொகையானது 60 தவணைகளில் மீண்டும் அறவிடப்பட வேண்டும். பிணையாளர்களாக ஒரு நபர் குறைந்த பட்சமாக 10 வருட தொடர்ச்சியான அங்கத்துவத்தை உடைய அங்கத்தவர் ஒருவர் உள்ளடங்கலாக பிணையாளர்கள் இருவர் முன்வைக்கப்படவேண்டும். பிணையாளர் ஒருவர் கடன் பெறும் இருவர்களுக்காக மட்டுமே பிணையாளராக செயற்பட முடியும்.

10- 963

# அரசாங்கப் பகுதிகளின் நானாவித அறிவித்தல்கள்

**தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ**

திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

2009, ஒகத்து 13 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சி இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :-

“ (கடன்பெறுநரான) கண்டியைச் சேர்ந்த ஹேரத் முதியான்சேலாகே செனவிரத்ன பண்டார என்பவர், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் ஆகவிருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) டபிள்யூ. எம். பிரபா செனவிரத்ன அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.04.06 ஆந் திகதிய 104 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீதும் பிரசித்த நொத்தாரிசு (திருவாட்டி) ஐ. டீ. வீரக்கொடி அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006.08.31 ஆந் திகதிய 294 ஆம் இலக்க சாட்டுதல் உறுதியின்மீதும் வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2009, யூலை 31 ஆந் தியதியன்றுள்ளவாறாக ஏழு இலட்சத்து பதினோராயிரத்து அறுநூற்றி நாற்பத்தாறு ரூபா (ரூ. 7,11,646.00) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறியின்மீது வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு, சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும், அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து, அக்களை என்பனவுட்பட, சொல்லப்பட்ட ஏழு இலட்சத்துப் பதினோராயிரத்து அறுநூற்றி நாற்பத்தாறு ரூபா (ரூ. 7,11,646.00) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும், 2009 ஒகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனைத் திகதி வரை ஏழு இலட்சத்து ஏழாயிரத்து அறுநூற்றியெண்பத்தொரு ரூபா (ரூ. 7,07,681.00) கொண்ட கூட்டுமொத்தத் தொகைமீது

ஆண்டொன்றுக்குப் பன்னிரெண்டு தசம் ஐந்து சதவீத வட்டியுடன் (12.5%) அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள் மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மத்திய மாகாணம், கண்டி மாவட்டத்திலுள்ள பாத்த தும்பரவின் பள்ளேகம்பஹா கோறளையில் பாத்ததும்பர பிரதேச சபை எல்லைகளினுள் பொல்லேகொட அம்பதென்னவில் அமைந்துள்ளதும் (முன்னர் பறணகம), அதன்மீதுள்ள கட்டிடங்கள், மரங்கள், பயிர்கள் மற்றும் வேறெல்லாவற்றுடனும் பொல்லேகொட எனவழைக்கப்படும் காணியினதாய் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எச். எம். ரீ. ஆர். விஜேரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1996.09.20 ஆந் திகதிய 896 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்தி லுள்ள காணித்துண்டம் 02 ; கிழக்கில் : சொல்லப்பட்ட வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 02 ; தெற்கில் : பீபீ மஹா 1944 இலுள்ள காணித்துண்டம் 50 மற்றும் ; மேற்கில் : அம்பதென்ன விலிருந்து கொலனிக்கான வீதி ; பரப்பளவில் இது, இருபது தசம் நான்கு பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.20.4பே.) கொண்டுள்ளது.

பணிப்பாளர்/பிரதான நிறைவேற்றலுவலர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-932/1

---

## தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ

*திருத்தப்பட்டவாறான 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் பணிப்பாளர் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

2009, மே 28 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சி இன் பணிப்பாளர் சபைக் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் சிறப்பாகவும் ஏகமனதாகவும் நிறைவேற்றப்பட்டது :-

"(கடன்பெறுநரான) பொரலஸ்கமுவையைச் சேர்ந்த நிரோஷன அமரசிங்க என்பவர், முன்னர் தேசிய அபிவிருத்தி வங்கி லிமிட்டெட் ஆகவிருந்த (வங்கி) தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ இன் சார்பில் பிரசித்த நொத்தாரிசு யூ. டீ. ரட்ணசிங்க அவர்களினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007.01.26 ஆந் திகதிய 53 ஆம் இலக்க முறிமீது வருமதியான கொடுப்பனவைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2009, ஏப்பிறல் 30 ஆந் தியதியன்றுள்ளவாறாக நான்கு இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்றியறுபத்தாறு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,99,866.47) கொண்ட தொகை சொல்லப்பட்ட முறியின்மீது வங்கிக்கு வருமதியாக வந்துள்ளதாதலாலும், வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1995 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) (திருத்தச்) சட்டத்தினால் திருத்தப்பட்டவாறான (பிரதான சட்டமான) 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளின் கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின்கீழ் தமக்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் செயற்பட்டு. சொல்லப்பட்ட முறியினால் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் ஆதனமும் வளவுகளும், அவ்வாதனத்துக்கும் வளவுகளுக்குமான இறையிலி மற்றும் வேறு உரிமை, உரித்து, அக்கறை என்பன உட்பட, சொல்லப்பட்ட பணத்தொகையான நான்கு இலட்சத்துத் தொண்ணூற்றொன்பதாயிரத்து எண்ணூற்றியறுபத்தாறு ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,99,866.47) கொண்ட தொகையையும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தையும் சொல்லப்பட்ட முறிமீது வருமதியான நான்கு இலட்சத்துத் தொண்ணூற்றையாயிரத்து எண்ணூற்றி முப்பது ரூபா நாற்பத்தேழு சதம் (ரூ. 4,95,830.47) கொண்ட கூட்டுமொத்தத் தொகைமீது 2009, மே 1 ஆந் நாள் தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்குப் பதினைந்து தசம் ஐந்து சதவீதப்படி (15.5%) வருமதியான வட்டியையும் அதன் பின்னர் பெறப்பட்ட கொடுப்பனவுகள் (எவையேனுமிருப்பின்) அவற்றைக் கழித்து, பிரதான சட்டத்தின் 4 ஆம் பிரிவின் நியதிகளின்படி அடையப்பட்ட விளம்பரச் செலவுகள், விற்பனைச் செலவுகள், மற்றும் ஏனைய இறுப்பனவுகள் என்பவற்றுடன் சேர்த்து அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற ஏலதாரரான திரு. பீ. கே. ஈ. சேனாபதி அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்திலுள்ள சல்பிட்டிக் கோறளையின் பள்ளே பத்துவில் கெஸ்பாவ பிரதேசசபை எல்லைகளினுள் திவுலப்பிட்டிய கிராமத்தில் ஸ்ரீ மஹா போதிராஜராம வீதிவழியாக அமைந்துள்ளதும், கோங்கஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உ. நி., பீ. டீ. ஜீ. வீரசிங்க என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1994.10.21 ஆந் திகதிய 2887 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் சீ1பீ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : காணித்துண்டம் சீ1ஏ ; கிழக்கில் : பியசேன விஜேதுங்கவினால் சொந்தமாக வைத்திருக்கப்பட்ட காணியின் பாகம் ; தெற்கில் : வீதி மற்றும் ; மேற்கில் : ஸ்ரீ மஹா போதிராஜராம வீதி ; பரப்பளவில் இது, ஏழு தசம் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.7.6பே.) கொண்டுள்ளது.

பணிப்பாளர்/பொது முகாமையாளர்,
தேசிய அபிவிருத்தி வங்கி பீஎல்சீ.

10-932/2

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(அத்திடிய கிளை)
கணக்கு இல. : 0410-01995646-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கல்கிசையைச் சேர்ந்த மாடசாமி ஜீவரட்னம் 'கடனெடுத்தவர்' என்றவகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு மதுகா விமலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் 10 ஆந் திகதிய 146 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2008, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது ஆறு இலட்சத்து எழுபத்தையாயிரத்து நூற்றுதொண்ணூற்று மூன்று ரூபா அறுபத்திரண்டு சதம் (ரூ. 6,75,193.62) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 6,75,193.62 பணத்தொகையையும் 2009, சனவரி 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 146 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம் மற்றும் கெசல்வத்த பாணந்துறை தொட்டமுனே பிரதேச செயலகத்தில் அமைந்துள்ளதும் (மூல வரைபடம் இல. 1387 இன் உட்பிரிவான) நில அளவையாளர் நாயகத்தின் சார்பில் களுத்துறைப் பிரிவின் நிலஅளவை அத்தியட்சகர் ஜே. பீ. என். எம். த சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1989.10.20 ஆந் திகதிய 2434 ஆம் இலக்கப் பிரிவினை வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 85 எனக் குறிக்கப்பட்ட பிரித்து வரையறுக்கப்பட்ட காணிப் பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட துண்டு 85 இன் எல்லைகள்- வடக்கு : துண்டு 66 ; கிழக்கு : துண்டுகள் 66, 83 மற்றும் 84 ; தெற்கு : துண்டுகள் 83, 84, புஹுூ ஹெரலியகஹவத்த தெல்கஹவத்த மற்றும் துண்டு 86 ; மேற்கு : தெல்கஹவத்த. இது முப்பத்தாறு தசம் ஏழு ஆறு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.36.76பே.) அல்லது பூச்சியம் தசம் பூச்சியம் ஒன்பது மூன்று ஹெக்டயர் (0.093 ஹெக்) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(பாணந்துறை கிளை)
கணக்கு இல. : 0050-131676-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"அலுபோமுல்லையில் வியாபாரம் நடத்துகின்றதும் உரியமுறையில் கூட்டிணைக்கப்பட்டதுமான ஒரு கம்பனியான எம்/ எஸ். சதர்ன் அப்பறல்ஸ் (பிரைவேட்) லிமிட்டெட் மற்றும் அலுபோமுல்லையைச் சேர்ந்த நஹீல் நந்தசிறி ஹப்புஆரச்சி 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க

PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு டபிள்யு. பி. எஸ். பொன்சேகா என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1992, மாச்சு 11 ஆந் திகதிய 2139, 1993, ஏப்பிறல் 5 ஆந் திகதிய 2250, 1995, பெப்புருவரி 13 ஆந் திகதிய 2442 மற்றும் 1996, ஏப்பிறல் 22 ஆந் திகதிய 2647 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால் இப்பொழுது 2008, யூன் 17 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது எண்பது இலட்சத்து எண்பத்தேழாயிரத்து தொளாயிரத்தறுபத்தைந்து ரூபா இருபத்தொரு சதம் (ரூ. 80,87,965.21) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 80,87,965.21 பணத்தொகையையும் 2008, யூன் 18 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 2139, 2250, 2442 மற்றும் 2647 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுனேயின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவில் மலமுல்லையில் அமைந்துள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜேம்ஸ் ஓ. ஓர் என்பவரால் தயாரிக்கப்பட்ட 1937, பெப்புருவரி 12 ஆந், 13 ஆந் திகதிய 2859 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு கொடபொறகஹவத்த மற்றும் வெவகொட ஹேனையின் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : ஹிரணவிலிருந்து கிரிபெரிய வுக்கான வண்டில் வீதி ; கிழக்கு : காலஞ்சென்ற தொன் ஒடனிஸ் குணதிலகவின் ஆதனம் மற்றும் அட்டு கெதனியவத்த ; தெற்கு : அட்டுகெதனியவத்த, கன்னியிங்கேவெல மற்றும் காலஞ்சென்ற சி. ஈ. குணதிலகவின் உரித்தாளிகளின் அதேகாணியின் துண்டு 2 ; மேற்கு : தெல்கஹவத்த. பதினொரு ஏக்கர் இருபத்தொரு பேர்ச்சஸ் (11ஏ.0றூ.21பே.) விஸ்தீரணம் கொண்ட இது பாணந்துறை காணிப் பதிவகத்தில் பக்கம் F74/189 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது. சொல்லப்பட்ட காணி உத்தரவுபெற்ற நில அளவையாளர் எல். டபிள்யூ. எல். த சில்வாவால் தயாரிக்கப்பட்ட 1992, பெப்புருவரி 2 ஆந் திகதிய 9435 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டவாறு அண்மைக்கால நிலஅளவீட்டின் பிரகாரம் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :

மேற்சொன்ன மலமுல்லையில் அமைந்துள்ள கொடபொறகஹவத்த மற்றும் வெவகொட ஹேனையின் துண்டு 1 முழுவதும். இதன் எல்லைகள் : வடக்கு : ஹிரணவிலிருந்து கிரிபெரியவுக்கான வீதி ; கிழக்கு : ஒடனிஸ் குணதிலகவின் உரித்தாளிகள் உரிமைகோரும் காணி மற்றும் அட்டுகெதனியவத்த ; தெற்கு : அட்டுகெதனியவத்த, கன்னிங்கேவெல மற்றும் சி. ஈ. குணதிலகவின் உரித்தாளிகளின் அதேகாணியின் துண்டு 2 ; மேற்கு : கிராமத்தவர்கள் உரிமைகோரும் தெல்கஹவத்த. சொல்லப்பட்ட 9435 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது பத்து ஏக்கர் மூன்று றூட் இருபத்தாறு பேர்ச்சஸ் (10ஏ. 3றூ.26பே.) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-967/2

---

### செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(ஜா-எல கிளை)
கணக்கு இல. : 0270-746574-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, ஏப்பிறல் மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"ஜா-எலையைச் சேர்ந்த மகாபட்டபெந்திகே அன்ரன் மொறென்சே பெரேரா மற்றும் வர்ணகுலசூரிய பரண பட்டபெந்திகே அனெக்ஸ்ரா மேரி கமலா பர்னாந்து 'கடனெடுத்தவர்கள்' என்றவகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. எஸ். எம். குணசிங்க என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 1999, யூலை 1 ஆந் திகதிய 124, 2000, யூலை 14 ஆந் திகதிய 383, 2000, ஒற்றோபர் 23 ஆந் திகதிய 469 ஆம் இலக்க மற்றும் 2001, மாச்சு 19 அந் திகதிய 568 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2005, யூன் 17 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது எழுபது இலட்சத்து பதினான் காயிரத்து அறுநூற்றெண்பத்திரண்டு ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 70,14,682.27) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட

ரூபா 70,14,682.27 பணத்தொகையையும் 2005, யூன் 18 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 1,24, 383, 469 மற்றும் 568 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோறளேயின் ராகம் பத்துவில் ஏக்கல கிராமத்தில் அலெக்ஸான்டிறா எஸ்ரேட் துண்டு 1 A என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். டி. ஜே. வீ. பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1980.07.17 ஆந் திகதிய 5573 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு A எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் இதன் எல்லைகள் - வடக்கு : கிராம சபை வீதி ; கிழக்கு : துண்டு B ; தெற்கு : துண்டு D ; மேற்கு : வரைபட இல. 3567 இல் துண்டு 2. இருபத்திரண்டு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.22பே.) விஸ்தீரணம் கொண்ட இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் B/62/287 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மற்றும் மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் அளுத்குரு கோறளேயின் ராகம் பத்துவில் ஏக்கல கிராமத்தில் அலெக்ஸான்டிறா எஸ்ரேட் துண்டு 1A என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். டி. ஜே. வீ. பெரேராவால் தயாரிக்கப்பட்ட 1980.07.17 ஆந் திகதிய 5573 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு D எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் - வடக்கு : துண்டு A ; கிழக்கு : துண்டுகள் B மற்றும் C ; தெற்கு : துண்டு E ; மேற்கு : துண்டு B இருபது பேர்ச்சஸ் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணம் கொண்ட இது நீர்கொழும்பு. காணிப்பதிவகத்தில் B/62/292 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதனுடன் வரைபட இல. 5573 இல் காட்டப்பட்ட கி. ச. வீதி, துண்டு A மற்றும் B இன் மேலாக வழி உரிமையுடனும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் எல்லாவற்றுடனும்.

### இரண்டாம் அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில், நீர்கொழும்பு பதிவுப்பிரிவினுள் அளுத்குரு கோறளேயின் ராகம் பத்துவில் ஜா-எல நகரசபை எல்லைகளினுள் துடெல்லையில் அமைந்துள்ள இல. 10, விஜய ஒழுங்கை என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் பக்மீகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. பீ. ஜே. பெரேராவால் தயாரிக்கப்பட்ட 2001.02.07 ஆந் திகதிய 1229 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : எஸ். ஆர். பெரேராவின் காணி ; கிழக்கு : கே. பாவுலு பெரேராவினதும் ஏனையோரினதும் மற்றும் ஜுஸ் பெரேராவினதும் ஏனையோரினதும் காணிகள் ; தெற்கு : கமமெத வீதி ஒழுங்கை ; மேற்கு : அன்ரனி பெரேரா, எஸ். ஐ. நாணயக்கார, எம். ஏ. சீ. ஸ்ரெம்பு, எஸ். ரொட்றிகோ, ஜே. ரொட்றிகோ, ஏ. எம். கே. பெரேரா மற்றும் எஸ். ஆர். பெரேராவின் காணிகள். இது மூன்று றூட் இருபத்தாறு பேர்ச்சஸ் (0ஏ.3றூ.26பே.) விஸ்தீரணம் கொண்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-968

---

### செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(விவசாய வங்கித்தொழில் அலகு கிளை)
கணக்கு இல. : 0860-30325212-101

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 04 ஐச் சேர்ந்த ரஜீந்திர பிரசன்ன ஏக்கநாயக்க அமரசேகர 'கடனெடுத்தவர்' என்றவகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு மதுக்க விமலசேன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் 14 ஆந் 15 ஆந் திகதிய 157 மற்றும் 2008, ஏப்பிறல் 8 ஆந் திகதிய 171, 172 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார். ஆதலால், இப்பொழுது 2009, பெப்புருவரி 16 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது எழுபத்தெட்டு இலட்சத்து இருபத்தாறாயிரத்து நூற்றுத்தொண்ணூற்றொரு ரூபா எழுபத்தெட்டுச் சதம் (ரூ. 78,26,191.78) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 78,26,191.78 பணத்தொகையையும் 2009, பெப்புருவரி 17 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின்

அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 151, 171 மற்றும் 172 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியுதவில்லி ஹத்பத்துவின் திரகந்தஹய கோறளேயில் கட்டுவாபிட்டிய மற்றும் வேரவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள 'கட்டுபிட்டிய எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 2007.03.22 ஆந் திகதிய 3221 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 2 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : இதில் துண்டு 1 ; கிழக்கு : இதில் துண்டு 1 ; தெற்கு : இதில் துண்டு 1 ; மேற்கு : இதில் துண்டுகள் 1 மற்றும் 3. இது இருபத்திரண்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.22.50பே.) விஸ்தீரணம் கொண்டது.

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியுதவில்லி ஹத்பத்துவின் திரகந்தஹய கோறளேயில் கட்டுவாபிட்டிய மற்றும் வேரவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள 'கட்டுபிட்டிய எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 2007.03.22 ஆந் திகதிய 3221 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 3 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : இதில் துண்டு 1 ; கிழக்கு : இதில் துண்டு 2 ; தெற்கு : இதில் துண்டுகள் 2 மற்றும் 1 ; மேற்கு : எஸ்ரேட் வீதி. இது பூச்சியம் மூன்று தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 03.80பே.) விஸ்தீரணம் கொண்டது.

சொல்லப்பட்ட வரைபட இல. 3221 இல் சொல்லப்பட்ட துண்டுகள் 2 மற்றும் 3 வரைபட இல. 2833 இல் கீழே விவரிக்கப்பட்ட துண்டு 1 இன் பிரித்து வரையறுக்கப்பட்ட பங்குகள் :

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியுதவில்லி ஹத்பத்துவின் திரகந்தஹய கோறளேயில் கட்டுவாபிட்டிய மற்றும் வேரவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள 'கட்டுபிட்டிய எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எச். பி. ஜோசப்பால் தயாரிக்கப்பட்ட 1972.09.30 ஆந் திகதிய வரைபடம் இல. C/1/74 இல் காட்டப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட துண்டுகள் D மற்றும் E இன் பிரிக்கப்பட்ட ஒரு பங்காயுள்ளதும் உததரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 2005.02.15 ஆந் திகதிய 2833 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : வீதி மற்றும் எஸ்ரேட் வீதி ; கிழக்கு : வரைபட இல. 2833 இல் துண்டு 2 ; தெற்கு : பிரதான வீதி ; மேற்கு : எஸ்ரேட் வீதி மற்றும் வீதி, ஒன்பது ஏக்கர் ஒரு றூட் (9ஏ. 1றூ. 0பே.) அல்லது மூன்று தசம் ஏழு நான்கு மூன்று மூன்று ஹெக்டயர் (3.7433 ஹெக்) விஸ்தீரணம் கொண்ட இது குருநாகல் மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A1548/206 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

அதனுடன் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் எஸ்ரேட் வீதியின் மேலாக வழி உரிமையுடனும்.

### இரண்டாம் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியுதவில்லி ஹத்பத்துவின் திரகந்தஹய கோறளேயில் கட்டுவாபிட்டிய மற்றும் வேரவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள 'கட்டுபிட்டிய எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 2007.03.22 ஆந் திகதிய 3221 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : வரைபட இல. 2852 இல் துண்டு 1A ; கிழக்கு : வரைபட இல. 2833 இல் துண்டு 2 ; தெற்கு : பிரதான வீதி ; மேற்கு : எஸ்ரேட் வீதி மற்றும் துண்டுகள் 2 மற்றும் 3. இது இரண்டு ஏக்கர் மூன்று றூட் பதின்மூன்று தசம் ஏழு பூச்சியம் பேர்ச்சஸ் (2ஏ.3றூ. 13.70பே.) விஸ்தீரணம் கொண்டது.

சொல்லப்பட்ட வரைபட இல. 3221 இல் சொல்லப்பட்ட துண்டு 1 வரைபட இல. 2833 இல் கீழே விவரிக்கப்பட்ட துண்டு 1 இன் பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு பங்கு :

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் வியுதவில்லி ஹத்பத்துவின் திரகந்தஹய கோறளேயில் கட்டுவாபிட்டிய மற்றும் வேரவெல்ல கிராமத்தில் அமைந்துள்ள 'கட்டுபிட்டிய எஸ்டேட்' என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். எச். பி. ஜோசப்பால் தயாரிக்கப்பட்ட 1972.09.30 ஆந் திகதிய வரைபடம் இல. C/1/74 இல் காட்டப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட துண்டுகள் D மற்றும் E இன் பிரிக்கப்பட்ட ஒரு பங்காயுள்ளதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. எம். எஸ். அத்தநாயக்கவால் தயாரிக்கப்பட்ட 2005.02.15 ஆந் திகதிய 2833 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும். இதன் எல்லைகள் – வடக்கு : வீதி மற்றும் எஸ்ரேட் வீதி ; கிழக்கு : வரைபடம் இல. 2833 இல் துண்டு 2 ; தெற்கு : பிரதான வீதி ; மேற்கு : எஸ்ரேட் வீதி மற்றும் வீதி. ஒன்பது ஏக்கர் ஒரு றூட் (9ஏ.1றூ.0பே.) அல்லது மூன்று தசம் ஏழு நான்கு மூன்று மூன்று ஹெக்டயர் (3.7433 ஹெக்) விஸ்தீரணம் கொண்ட இது குருநாகல் மாவட்டக் காணிப்பதிவகத்தில் தொகுதி/பக்கம் A1548/206 இன் கீழ் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் – சட்டம்.

10-969/1

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

*(மீரிகம கிளை)*
*கணக்கு இல. : 0780-09022910-001*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"மீரிகமையைச் சேர்ந்த மொஹமட் முபாரக் மொஹமட் பாஹிம் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். சி. ரணவீர என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1996, செத்தெம்பர் 25 ஆந் திகதிய 2410 ஆம் இலக்க மற்றும் 1997, திசெம்பர் 16 ஆந் திகதிய 3107 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஐந்து இலட்சத்து தொண்ணூற்றை யாயிரத்து எண்ணூற்றறுபத்தாறு ரூபா எழுபத்தைந்து சதம் (ரூ. 5,95,866.75) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 5,95,866.75 பணத்தொகையையும் 2008, நவெம்பர் 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தைந்து சதவீதப்படி (35%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 2410, 3107 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யு. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

**அட்டவணை**

*மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் ஹப்பிட்டிகம் கோறளேயின் யட்டிகஹ பத்துவில் மீரிகம பிரதேச சபையின் இல. 3 பள்ளேவல உப அலுவலக எல்லைகளினுள் கல்-எலியவில் அமைந்துள்ள தெல்கஹவத்த, கோங்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்னவால் தயாரிக்கப்பட்ட 1996.08.18 ஆந் திகதிய 6830 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : மஸ்ஜித் மாவத்தை ; கிழக்கு : இதே காணியின் எஞ்சிய பங்கு ; தெற்கு : இதே காணியின் எஞ்சிய பகுதி ; மேற்கு : தெவட்ட வீதி. சொல்லப்பட்ட 6830 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது இருபது பேர்ச்சஸ் (0ஏ.0றூ.20பே.) விஸ்தீரணம் கொண்டது.*

*சொல்லப்பட்ட வரைபடம் இல. 6830 இல் காட்டப்பட்ட சொல்லப்பட்ட காணிப்பங்கீடு பின்வருமாறு விவரிக்கப்பட்ட காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்ட ஒரு பங்கு :*

*மேலே சொல்லப்பட்ட கல்-எலியவில் அமைந்துள்ள கோங்கஹவத்த மற்றும் தெல்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். ஏ. சந்திரரத்னவால் தயாரிக்கப்பட்ட 1980, மாச்சு மாதம் 14 ஆந் திகதிய 1239 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் : வடக்கு : மஸ்ஜீத் மாவத்தை ; கிழக்கு : வரைபடம் இல. 1239 இல் நிலாம் தாஹிருக்கு சொந்தமான துண்டு 2 ; தெற்கு : ஏ. சி. அப்துல் ரஸாக்கினதும் எஸ். சி. எம். ஜலீல் நஜ்ஜியாரினதும் காணி ; மேற்கு : ஏ. சி. அப்துல் ரஸாக்கின் காணி மற்றும் மஸ்ஜீத் மாவத்தையிலிருந்து ஒற்றையடிப்பாதை. சொல்லப்பட்ட 1239 ஆம் இலக்க வரைபடத்தின்படி இரண்டு றூட் இருபத்தைந்து பேர்ச்சஸ் (0ஏ.2றூ.25பே.) விஸ்தீரணமுள்ள இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் D 206/ 118 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.*

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

*சீ. கொட்டிகல,*
*சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.*

*10-969/2*

---

**செலான் வங்கி ப. வ. க.**

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

*(மீரிகம கிளை)*
*கணக்கு இல. : 0780-00727370-001*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால்*

*2009, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"மினுவாங்கொடையைச் சேர்ந்த அஹமட் மூசீன் மொஹமட் பாயிஸ் மற்றும் மொஹமட் யூசுப் பரிசா பீபீ அல்லது மொஹமட் யூசுப் பரிசா பீபீ பாயிஸ் 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு கே. டி. ரி. கே. களுஆரச்சி என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, நவெம்பர் 9 ஆந் திகதிய 181 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2008, மாச்சு 12 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது பதின்மூன்று இலட்சத்து தொண்ணூற்றேழாயிரத்து நானூற்று நாற்பத்திரெண்டு ரூபா நாற்பத்தெட்டுச் சதம் (ரூ. 13,97,442.48) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 13,97,442.48 பணத்தொகையையும் 2008, மாச்சு 13 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 181 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டத்தில் மற்றும் நீர்கொழும்பு பதிவுப்பிரிவினுள் அளுத்குரு கோறளேயின் தாசிய பத்துவில் மினுவாங்கொட பிரதேச சபை எல்லைகளினுள் மினுவாங்கொட உப அலுவலகப் பிரதேசத்தில் கல்லொலுவவில் அமைந்துள்ள கோங்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. ஏ. யு. சேனரத்தால் தயாரிக்கப்பட்ட 2002.07.07 ஆந் திகதிய 1854 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : ஏ. எம். எம். பாயிஸின் காணி ; கிழக்கு : தக்கியா வீதி ; தெற்கு : ஈ. எல். ரஹிலா உம்மாவினதும் ஏனையோரினதும் காணி ; மேற்கு : எம். வை. பாரிஸாவின் காணி. இருபது தசம் ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.20.5பே.) விஸ்தீரணமுள்ள இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் தொகுதி/ பக்கம் C867/45 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-969/ 3

---

### செலான் வங்கி ப. வ. க.

*(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்*

*(அபிவிருத்தி வங்கித்தொழில் கிளை)*
*கணக்கு இல. : 0830-AN3811-101*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, ஓகத்து மாதம் 27 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*"மாலபேயைச் சேர்ந்த ஜயராஜ் ரெனிசன் வீரசூரிய மற்றும் ஹீனட்டிகல படல்கே தர்ஷனி மெத்தானந்த 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். புறொக்டர் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, மாச்சு 19 ஆந் திகதிய 268,269 மற்றும் 270 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒரு கோடி முப்பத்தொரு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து ஐந்நூற்று முப்பத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 1,31,33,535.51) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 1,31,33,535.51 பணத்தொகையையும் 2009, மே 01 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 268, 269 மற்றும் 270 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான முதலாம், இரண்டாம், மூன்றாம் அட்டவணைகளில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனமும் வளவும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."*

### முதலாம் அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கொடுவல பிரதேச சபை எல்லைகளினுள் மாலபேயில் அமைந்துள்ள ரிக்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்துவரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வாவால் தயாரிக்கப்பட்ட 2006,

செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2602 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 1B1 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1B1 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 1B2 ; கிழக்கு : வரைபடம் இல. 682 இல் துண்டு 9 ; தெற்கு : துண்டு 1B7 ; மேற்கு : வீதி. சொல்லப்பட்ட 2602 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒன்பது பேர்ச்சஸ் (0ஏ.0றூ.9பே.) விஸ்தீரணமுள்ளது.

பின்வரும் காணியின் மேலாக வழி உரிமையும் ஏனைய உரிமைகளும் கொண்டதாக :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் ஹேவகம் கோறளேயின் பள்ளே பத்துவில் கொகுவல பிரதேச சபை எல்லைகளினுள் மாலபேயில் அமைந்துள்ள ரிக்கஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்துவரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ. ஆர். சில்வாவால் தயாரிக்கப்பட்ட 2006, செத்தெம்பர் 28 ஆந் திகதிய 2602 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 1B7 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1B7 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 1B1 ; கிழக்கு : வரைபடம் இல. 682 இல் துண்டு 9 ; தெற்கு : வீதி ; மேற்கு : வீதி. சொல்லப்பட்ட 2602 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ் (0ஏ.0றூ.0.25பே.) விஸ்தீரணமுள்ளது.

**இரண்டாம் அட்டவணை**

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளேயின் உடகஹபத்துவில் ஹோமாகம (உப அலுவலகம் வெத்தர) பிரதேச சபை எல்லைகளினுள் மாகம்மானவில் அமைந்துள்ள கல்கொடெல்லந்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்துவரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டி. ஜி. வீரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2001, பெப்புருவரி 22 ஆந் திகதிய 1897 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 68 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 68 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 112 ; கிழக்கு : துண்டு 69 ; தெற்கு : மில்லகஹவத்த ; மேற்கு : துண்டு 67. சொல்லப்பட்ட 1897ஆம் இலக்க வரைபடத்தின்படி இது பத்து தசம் பூச்சியம் எட்டு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.10.08பே.) விஸ்தீரணமுள்ளது.

பின்வரும் காணிகளின் மேலாக வழி உரிமையும் ஏனைய உரிமைகளும் கொண்டதாக :

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளேயின் உடகஹபத்துவில் ஹோமாகம (உப அலுவலகம் வெத்தர) பிரதேச சபை எல்லைகளினுள் மாகம்மானவில் அமைந்துள்ள கல்கொடெல்லந்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்துவரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் கே. டி. ஜி. வீரசிங்கவால் தயாரிக்கப்பட்ட 2001, பெப்புருவரி 22 ஆந் திகதிய 1897 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 100 (வீதிக்கான ஒதுக்கம் 6.6 மீற்றர் அகலம்) எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் சொல்லப்பட்ட துண்டு 100 இன் எல்லைகள் - வடக்கு : துண்டு 117 ; கிழக்கு : துண்டுகள் 95, 98, 94 முதல் 88, 99, 87 முதல் 81,101, 80, 79 ; தெற்கு : துண்டு 111 ; மேற்கு : துண்டுகள் 63, 102, 61 முதல் 54, 104, 53 முதல் 48, 106 மற்றும் 47. சொல்லப்பட்ட 1897 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு றூட் பதினைந்து தசம் மூன்று ஏழு பேர்ச்சஸ் (0ஏ.1றூ.15.37பே.) விஸ்தீரணமுள்ளது. (ஹோமாகம காணிப் பதிவகத்தில் N325/207 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது).

டிவிசன் அமைந்துள்ள நில அளவையாளர் டபிள்யூ. ஏ. யு. செனரத் 15.06.2002 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1824 இல் காண்பிக்கப்பட்ட பக்மீகாவத்த என்ற காணியின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 2 இன் காணியின் எல்லைகள் - வடக்கு : மேற்படி வரைபடத்தில் லொட் 4 (12 அடி ரோட்) ; கிழக்கு : லொட் 1 ; தெற்கு : எம். டயிடஸ் பெர்னாந்துவின் காணி ; மேற்கு : எல ரூபண் பெர்னாந்துவின் காணி மற்றும் லொட் 3 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.23.2பே.) மற்றும் மேற்படி சொல்லப்பட்ட வரைபடத்தில் காண்பிக்கப்பட்ட 12 அடி பாதையான லொட் 4 பாவிக்கும் உரிமையுடன் இக்காணி நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் A290/ 207 பதிவு செய்யப்பட்டது.

திருமதி ஆர்.ஆர். துனுவில
கம்பனிச் செயலாளர்

10-1044

---

## கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ (பதிவு இலக்கம் PQ116) பணிப்பாளர்கள் சபையினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானம்*

கடன் கணக்கு இலக்கம் : 309317- பாலகே பியல் ஜயன்த அபேகுணவர்தன, பாலகே துசாந்தி கீதிகா அபேகுணவர்தன பி. டி. எஸ். ஒட்டோ டிரேடர்ஸ் பங்குதாரர்கள்

கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 19.06.2009 ஆந் திகதி கூடிய கூட்டமொன்றில் பின்வருமாறு ஏகமனதாக தீர்மானிக்கப்பட்டது :-

"கடன் எடுத்த பி. டி. எஸ். ஒட்டோ டிரேடர்ஸ் என்ற பெயரில் பங்குதாரர்களாக வியாபாரம் செய்யும் பாலகே பியல் ஜயன்த அபேகுணவர்தன மற்றும் பாலகே துசாந்தி கீதிகா அபேகுணவர்தன என்பவர்கள் மற்றும் காணியை ஈடுவைத்த பாலகே துசாந்தி கீதிகா அபேகுணவர்தன என்பவர் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் லிமிடெட் தற்சமயம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீ.எல்.சீ சார்பாக பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு யு. டி. பியசேனவின் 29.05.2006 ஆந் திகதி முறி இலக்கம் 2489 மூலம் செலுத்தவேண்டிய கொடுப்பனவில் தவறுகை புரிந்துள்ள தாலும் அத்துடன் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு 04.05.2009 ஆந் திகதி வரை ரூபா 1,606,141.90 தற்சமயம் வருமதியாக உள்ளதாலும் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீ பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் 4வது சிறப்பு சட்டத்தின் பிரகாரம் மேற்படி முறி இலக்கம் 2489 மூலம் கொமர்ஷல் பாங்க் ஒப் சிலோன் பீஎல்சீக்கு ஈடுவைக்கப்பட்ட இவ் அட்டவணையில் விபரிக்கப்பட்ட காணிகளை மேற்படி சொல்லப்பட்ட பணத் தொகையான ரூபா 1,606,141.90 பணத்தொகையுடன் 05.05.2009 ஆந் திகதி முதல் ஏலத்திகதி வரை ரூபா 1,498,000 பணத்தொகைக்கு மேலதிக வட்டியாக ஆண்டொன்றுக்கு 22 சதவட்டியுடன் விளம்பரச் செலவுகள், வேறு கொடுப்பனவுகள் சேர்த்து அறவிடுவதற்காக கொழும்பு 12, புதுக்கடை வீதியில் இலக்கம் 99 உரிமை பெற்ற ஏலதாரர் எல். பி. சேனநாயக்க மூலம் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், களுத்துறைபத்த களுத்துறை தொட்டமுன நாகொட கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் சி. எச். பி. விக்ரமசேகரவின் 29.06.1958 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 1217 இல் காண்பிக்கப்பட்ட லொட் 2A, 2D, 2E, 2H, 2I, 2L மற்றும் 2M என்ற காணிகளின் பகுதி படுத்திய நில அளவையாளர் என். எஸ். எல். பெர்னாந்துவின் 02.08.1970 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 999 இல் காண்பிக்கப்பட்ட பிட்டகொண்எலிய என்ற காணியின் பகுதிபடுத்திய காணித் துண்டான லொட் 1 என்ற காணியின் எல்லைகள் - வடக்கு-கிழக்கு : இக்காணியின் லொட் 2 ; தெற்கு - கிழக்கு : ரோட் (வரைபடம் இலக்கம் 1217. லொட் 2) ; தெற்கு -மேற்கு : களுத்துறையிலிருந்து நாகொட செல்லும் பிரதான ரோட் ; வடக்கு - மேற்கு : வரைபடம் இலக்கம் 1217 இல் லொட் 1 இக்காணியின் விஸ்தீரணம் (0ஏ.0றூ.20.8பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 999படி இக்காணி களுத்துறை காணிப் பதிவகத்தில் A622/147 பதிவு செய்யப்பட்டது.

மேற்படி நாகொடை கிராமத்தில் அமைந்துள்ள நில அளவையாளர் என். எஸ். எல். பெர்னாந்துவின் 02.08.1970 ஆந் திகதியுடைய வரைபடம் இலக்கம் 999 இல் காண்பிக்கப்பட்ட பிட்டகொண்எலிய என்ற காணியின் பகுதிபடுத்திய காணி துண்டான லொட் 2 என்ற காணியின் எல்லைகள் : வடக்கு - கிழக்கு : இக்காணியின் லொட் 3 ; தெற்கு - கிழக்கு : ரோட் (வரைபடம் இலக்கம் 1217 இல் லொட் 20) ; தெற்கு -மேற்கு : இக்காணியின் லொட் 1 ; வடக்கு - மேற்கு : வரைபடம் இலக்கம் 1217 இல் லொட் 1 இக்காணியின் விஸ்தீரணம் 0ஏ.0றூ.19.7பே.) மேற்படி வரைபடம் இலக்கம் 999 படி இக்காணி களுத்துறை காணி பதிவகத்தில் A 622/148 இல் பதிவுசெய்யப்பட்டது.

திருமதி ஆர்.ஆர். துனுவில
கம்பனிச் செயலாளர்

10-1045

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(ஹொறண கிளை) ஹிடெல்லா ஆராச்சிகே சீத்தா

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, யூன் மாதம் 24 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

" ஹிடெல்லா ஆராச்சிகே சீத்தா கடற்பாடு உடையவராக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் பாணந்துறை பிரசித்த நொத்தாரிசு பீ. வி. என். டபிள்யூ. பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, செத்தெம்பர் 25 ஆந் திகதியிடப்பட்ட 1717 இலக்க முறி, மீதான

வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2008, ஒற்றோபர் 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பதினைந்து இலட்சத்து ஐம்பத்து இரண்டாயிரத்து அறுநூற்று எழுபத்து மூன்று ரூபா அறுபத்து ஐந்து சதம் (ரூபா 1,552,673.65) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும், சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1717 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,552,673.65 பணத்தொகையை 2008, நவெம்பர் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமை பெற்ற ஏலவிற்பனையாளர் எஸ். மனம்பேரியினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப் பட்டுள்ளது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், ரைகம் கோறள கும்புகே பற்றுவின் ஹொரண நகர சபையின் எல்லைக்கு உட்பட்ட ஹொறணையின் ஹேகல்லேகந்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம் உரிமை பெற்ற நில அளவையாளர் சி. விக்கிரமகேயினால் தயாரிக்கப்பட்ட 1991, மாச்சு 16 ஆந் திகதியிடப்பட்ட 896 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்ட காணித்துண்டு 3 என அடையாளமிடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் வடக்கு : சொல்லப்பட்ட 896 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2ஏ ; கிழக்கு : 60133 இலக்க வரைபடத்தில் உள்ள காணி ; தெற்கு : காணி சீர்பாடு ஆணைக்குழுவினால் உரிமை கோரப்படும் காணி ; மேற்கு : சீலரத்ன வீதி மற்றும் சொல்லப்பட்ட 896 இலக்க வரைபடத்திற்கு அமைவானதும், ஹொரண காணிப் பதிவகத்தில் சி 149/50 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட மூன்று றூட் மற்றும் பதினாறு தசம் எட்டு பேர்ச்சுகள் (0ஏ.3றூ.16.8பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/1

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(முகத்துவாரம் கிளை) - பாத்திமா முகர்ரிசா ஜல்டின் கன்னிப்பெயர் பாவா மற்றும் மொகமட் செயினுடீன் இக்பால் ஜல்டின்

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, மே மாதம் 28 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

" பாத்திமா முகர்ரிசா ஜல்டின் கன்னிப்பெயர் பாவா மற்றும் மொகமட் செயினுடீன் இக்பால் ஜல்டின் கடற்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஏ. ஆர். டி. சில்வாவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் 11 ஆந் திகதியிடப்பட்ட 1265 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009, சனவரி 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபது இலட்சத்து ஐம்பத்து மூன்றாயிரத்து நூற்றுப் பத்து ரூபா அறுபது சதம் (ரூபா 2,053,110.60) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1265 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 2,053,110.60 பணத்தொகையை 2009, பெப்புருவரி 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமை பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தலுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பள்ளே பற்று, கடுவெல பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட, பத்தரமுல்ல பிரிவின் அக்குறேகொடவின் ஹோகந்தற வீதியின் 253/23பி வரிமதிப்பீட்டிலக்கத்தில் மில்லகஹாவத்தஓவிற்ற மறுபெயர் அலுபோகஹாலந்த என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள், மற்றும் எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் டீ. டீ. ஹெற்றிகேயினால் தயாரிக்கப்பட்ட 2003, யூன் 25 ஆந் திகதியிடப்பட்ட 3963 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஏ என அடையாளம் இடப்பட்டதுமான, அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் : வடக்கு : லொக்குஹெற்றகொடகே மாட்டின் பெரேராவின் வாரிசுகளின் காணி ; கிழக்கு : வரைபட இலக்கம் 2279 இன் காணித்துண்டு 4 ;

தெற்கு : 30 அடி அகலமான வீதிக்கான ஒதுக்கீடு - வரைபட இலக்கம் 2279 இன் காணித்துண்டு 14 ; மேற்கு : காணித்துண்டு பி அத்துடன், சொல்லப்பட்ட வரைபட 3963 இற்கு அமைவானதும், ஹோமகம காணிப்பதிவகத்தில் தலைப்பின்கீழ் ஜீ 1474/45 இலக்கத்தின் கீழ் பதிவு செய்யப்பட்ட பதினைந்து பேர்ச்சுகள் (0ஏ.0றூ.15பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

அத்துடன், விபரிக்கப்பட்ட அடகு முறி இலக்கம் 1265 இன் இரண்டாவது அட்டவணையில் மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவான பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/2

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(துங்காலை கிளை) - ஹேவா கஜமன் கங்கனம்கே குஷான் கங்கான மற்றும் ஹேவா கஜமன் கங்கனம்கே சுனில் பிரேமசிரி

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

''ஹேவா கஜமன் கங்கனம்கே குஷான் கங்கான மற்றும் ஹேவா கஜமன் கங்கனம்கே சுனில் பிரேமசிரி கடற்பாடுடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் அம்பலாந்தோட்ட பிரசித்த நொத்தாரிசு எச். ஏ. அமரசேனவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, யூன் மாதம் 21 ஆந் திகதியிடப்பட்ட 8487 ஆம் இலக்க முறி, மீதான ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சீ. சார்பிலான கொடுப்பனவுகளின் தவணைகளை செலுத்த தவறியுள்ளதாலும், 2009.07.31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது (ரூபா 1,737,684.58) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சீ. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 8487 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 1,737,684.58 கொண்ட பணத்தொகையை 2009, ஓகத்து 1 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டி, விளம்பரச் செலவு, மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தலுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

#### அட்டவணை

தென் மாகாணம், ஹம்பாந்தோட்டை மாவட்டம், தென் கிருவபற்று கஹவத்தயில் உள்ள அலஹேன்பிற்றினே லியனஆராச்சிகே வத்த என அழைக்கப்படும் காணித்துண்டு 1. உரிமம் பெற்ற நில அளவையாளர், ரீ. எச். ஜீவானந்தவினால் தயாரிக்கப்பட்ட 1992, மே 22 ஆந் திகதியிடப்பட்ட 92/59 ஈ இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதும். காணித்துண்டு 1 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதுமான ஆதனத்தின் எல்லைகள் : வடக்கு : வித்தாரணகேஹேன ; கிழக்கு : வலஸ்முல்ல - பெலியத்த பிரதான வீதி, மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 92/59ஈ இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 2 ; தெற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் என். விஜயவீரவினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1210 இல் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 1 மற்றும் வரைபட இலக்கம் 92/59ஈ இல் உள்ள காணித்துண்டு 2 ; மேற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் என். விஜயவீரவினால் தயாரிக்கப்பட்ட வரைபட இலக்கம் 1210 இல் உள்ள காணித்துண்டு 1, மற்றும் கரகஹாமுலான என்பதுடன் தங்காலை காணிப்பதிவகத்தில் எப். 175/290 இல் பதிவு செய்யப்பட்ட, 0.4299 ஹெக்டயர் அல்லது ஒரு ஏக்கர் மற்றும் பத்து பேர்ச்சுகள் (1ஏ. 0றூ. 10பே.) உடன் கட்டடங்கள், தோட்டங்கள் மற்றும் அனைத்தையும் கொண்டுள்ள ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/3

---

## ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

### 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(கம்பளை கிளை) - பிரசன்ன நகித்த பண்டார தர்மகீர்த்தி ருவான் பண்டார தர்மகீர்த்தி மற்றும் எரந்தெனி இலங்கத்திலக்க பண்டார

ஹட்டன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

''பிரசன்ன நகித்த பண்டார தர்மகீர்த்தி ருவான் பண்டார தர்மகீர்த்தி மற்றும் எரந்தெனி இலங்கத்திலக பண்டார கடற்பாடு உடையவர்களாக, ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கண்டி

பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால், அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, செத்தெம்பர் மாதம் 12 ஆந் திகதயிடப்பட்ட 1256 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள் ஆதலாலும், 2009, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது தொண்ணூற்று ஆறு இலட்சத்து பத்தொன்பதாயிரத்து முன்னூற்று பதினேழு ரூபா அறுபது சதம் (ரூபா 9,619,317.60) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1256 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப் பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 9,619,317.60 பணத்தொகையை 2009, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டி, விளம்பரச் செலவு, மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், கம்பளை பதிவுப் பிரதேசத்தில் உள்ள உடபலாத்தவின் கங்க இஹள கோறளவின், டொலஸ் தெவி ஹுனவில் உள்ள கெதரவத்த காணியின் ஒரு பகுதி உரிமம் பெற்ற நில அளவையாளர் எஸ். எம். தல்வத்தவினால் தயாரிக்கப்பட்ட 1969, பெப்புருவரி 16 ஆந் திகதியிடப்பட்ட 2173 இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். டி. ஜீ. கே. பீ. ரொட்ரிகோவினால் தயாரிக்கப்பட்ட 1968, ஓகத்து 22 ஆந் திகதியிடப்பட்ட 47 ஆம் வரைபடத்தில் விபரிக்கப்பட்ட பகுதி ; கிழக்கு : வடிகால் மற்றும் சொல்லப்பட்ட 47 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்ட வகையில் காணியைப் பிரிக்கும் எல்லை மற்றும் பீ. டபிள்யு. டி வீதி ; தெற்கு : டொலஸ்பாகேயில் இருந்து கம்பளைக்குச் செல்லும், பீ. டபிள்யு. டி. வீதி மற்றும் கல்பாய எஸ்டேட் ; மேற்கு : நெதவல எஸ்டேட்டை பிரிக்கும் மல எல மற்றும் கம்பளை மாவட்ட காணிப்பதிவகத்தில் பிரிவு/பக்கம் சி 163/245 என்ற தலைப்பில் பதிவு செய்யப்பட்ட இரண்டு ஏக்கர் மூன்று றூட்ஸ் மற்றும் ஏழு பேர்ச்சுகள் (2ஏ. 3றூ. 7பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/4

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நிட்டம்புவ கிளை) - விஜயசிங்க திசாநாயக்ககே டொன் அஜித் லெஸ்லி திசாநாயக்கா

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 17 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

''விஜயசிங்க திசாநாயக்காககே டொன் அஜித் லெஸ்லி திசாநாயக்க கடற்பாடு உடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கம்பஹா பிரசித்த நொத்தாரிசு பீ. என். ஏக்கநாயக்கவினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006, மாச்சு மாதம் 17 ஆந் திகதியிடப்பட்ட 5372 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, யூன் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது (ரூபா 2,850,945.48) பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் குறிப்பிடப்பட்ட 5372 ஆம் இலக்க முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 2,850,945.48 பணத்தொகையை 2009, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமை பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியானே கோறள, உடுகஹா பற்று, மீரிகம பிரதேச சபையின் பள்ளேவல உப காரியாலயத்தின் எல்லைக்கு உட்பட்ட களனி - வெல்லாவில்லமுல்லவிலில் உள்ள ''ஹன்சகிரிவத்த'' என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், உரிமை பெற்ற நில அளவையாளர் ஆர். யூ. விஜயதுங்கவினால் தயாரிக்கப்பட்ட 2005, மாச்சு மாதம் 18 ஆந் திகதியிடப்பட்ட 6685/2005 இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 107 என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : பீ. பீ. இலக்கம் 1619 இல் உள்ள

காணித்துண்டுகள் 81 ; கிழக்கு : வரைபட இலக்கம் 1619 இன் காணித்துண்டு 106 ; தெற்கு : 20 அடி அகலமான வீதி ; மேற்கு : வரைபட இலக்கம் 1619 இன் காணித்துண்டு 106, அத்துடன் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் 6685/2005 இற்கு அமைவானதும் நீர்கொழும்பு மாவட்ட காணிப் பதிவகத்தில் டீ 336/45 என்ற தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்ட முப்பத்தி ஆறு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 36பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/5

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(புதுக்கடை கிளை) -கிருஷ்னி இவ்ஹாம் மற்றும் சந்திரலிங்கம் சிறிககன்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"கிருஷ்னி இவ்ஹாம் மற்றும் சந்திரலிங்கம் சிறிககன் கடற்பாடு உடையவர்களாக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு எம். பீ. எம். மொஹோட்டியினால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003, யுன் மாதம் 27 ஆந் திகதியிடப்பட்ட 1956 ஆம் இலக்க முறி, மீதான வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, மே 21 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஏழு இலட்சத்து பத்தாயிரத்து ஐநூற்று இருபத்து ஒன்பது ரூபா முப்பது சதம் (ரூபா 7,10,529.30) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1956 ஆம் இலக்க, முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 7,10,529.30 பணத்தொகையை 2009, மே 22 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள்வரை, மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமை பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்தவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியன் கோறளை, அதிகாரி பற்று, களனி பிரதேச சபையின் எல்லைக்கு உட்பட்ட தலுகம உபகாரியாலயத்தின் கீழ் உள்ள ஹுனுப்பிட்டிய, தலுப்பிற்றிய வீதியில் உள்ள 52/1 வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள "மக்குலகஹாவத்த" என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. ஜே. டீ சில்வாவினால் தயாரிக்கப்பட்ட 2002, யூலை மாதம் 30 ஆந் திகதியிடப்பட்ட NY11/2002 இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள ஏ2 காணித்துண்டு என அடையாளமிடப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : காணித்துண்டு ஏ1 ; கிழக்கு : ராஜசிங்க மாவத்தை ; தெற்கு : காணித்துண்டு ஏ3 ; மேற்கு : உரிமம் பெற்ற நில அளவையாளர் ஜீ. எல். பி. நாணயக்காரவினால் தயாரிக்கப்பட்ட 1989, மே 26 ஆந் திகதியிடப்பட்ட 6699 வரைபட இலக்கத்தின் டி1 காணித்துண்டு மற்றும் சொல்லப்பட்ட வரைபட இலக்கம் JY11/2002 இற்கு அமைவானதும், பத்து பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/6

---

## ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(புதுக்கடை கிளை) - வேலப்பு நைடெலாகே லிலான் சம்பத்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"வேலப்பு நைடெலாகே லிலான் சம்பத் என்பவர் கடற்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கொழும்பு பிரசித்த நொத்தாரிசு என். சி. ஜெயவர்த்தன என்பவரால், அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2004, ஒற்றோபர் மாதம் 7 ஆந் திகதிய

2225 ஆம் இலக்க முறி மீது, வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், அத்துடன் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது இருபத்தெட்டு இலட்சத்து இருபத்தேழு ஆயிரத்து நூற்று எழுபத்தாறு ரூபா ஒன்பது சதம் (ரூபா 28,27,176.09) கொண்ட பணத்தொகை ஒன்று ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும், சொல்லப்பட்ட 2225 ஆம் இலக்க, முறி மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 28,27,176.09 பணத்தொகையை 2009, ஓகத்து 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமை பெற்ற ஏலவிற்பனையாளர் எச். தளுவத்த என்பவரால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில், ஹேவகம் கோறள பள்ளே பற்றுவில் கடுவெல பிரதேச சபையில் கடுவெல அலகின் எல்லைகளுக்குள் மாலபே என்னும் இடத்தில் அமைந்துள்ளதும் ''பொல்கெஸ்மேலந்த'' என அழைக்கப்படும் காணியிலிருந்து உரிமம் பெற்ற நில அளவையாளர் பி. எப். டயஸ் என்பவரால் தயாரிக்கப்பட்ட 2002, ஓகத்து மாதம் 04 ஆந் திகதியிடப்பட்ட 1552C ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு C என அடையாளமிடப்பட்டுள்ளதுமான அப்பிரிக்கப்பட்ட, வரையறுக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் சொல்லப்பட்ட காணித்துண்டு C இன் எல்லைகள்: வடக்கு : டேவிட் மாயாதுன்னேயின் இறப்பர் காணி ; கிழக்கு : 579 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 2 ; தெற்கு : காணித்துண்டு D அத்துடன் ; மேற்கு : காணித்துண்டு E (12 அடி அகல வீதிக்கான ஒதுக்கு) மற்றும் காணித்துண்டு B ஹோமகம காணிப்பதிவகத்தில் உரித்து G 1316/245 கீழ் பதிவுசெய்யப்பட்டதும் 1552C ஆம் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தின் படி பத்து தசம் எட்டு சைபர் பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 10.80பே.) விஸ்தீரணம் கொண்டதுமான காணி.

அத்துடன் 2004, ஒற்றோபர் 7 ஆந் திகதிய 2225 ஆம் இலக்க ஈட்டு முறியின் இரண்டாம் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப் பட்டுள்ள பாதை உரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/7

---

### ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(கம்பளை கிளை) - திஸ்ஸநாயக்க முதியன்சேலாகே திஸ்ஸநாயக்க

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

''திஸ்ஸநாயக்க முதியன்சலாகே திஸ்ஸநாயக்க என்பவர் கடற்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கம்பளை பிரசித்த நொத்தாரிசு ரி. பி. அபேக்கூன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய 3822 ஆம் இலக்க முறி மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளாராதலாலும், அத்துடன் 2009, யூலை 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது பதின்மூன்று இலட்சத்து இருபத்து மூன்றாயிரத்து அறுநூற்றி எழுபத்தெட்டு ரூபா நாற்பத்து ஒன்பது சதம் (ரூபா 13,23,678.49) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட சொல்லப்பட்ட 3822 இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 13,23,678.49 பணத்தொகையை, 2009.08.01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் உறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படல் வேண்டுமென இத்தால் தீர்மானிக்கிறது.''

### அட்டவணை

1. இலங்கைக் குடியரசின் மத்திய மாகாணம், கண்டி மாவட்டம், உடுநுவரவின் கந்துபலாத்த கோறளையில் றத்மல்கடுவ தற்போது அல்பிட்டிகந்த கிராமத்தில் அமைந்துள்ளதும் மேல் சிங்கபிட்டிய எஸ்டேட் மறுபெயர் அக்கறாசியாவத்தை என அழைக்கப்படும் அக்காணி முழுவதிலுமிருந்து நாலு ஏக்கர்கள் மூன்று றூட்டுகள் இருபத்தொன்பது பேச்சுகள் (4ஏ. 3றூ. 29பே.) விஸ்தீரணம் கொண்டதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. எச். கருணாரத்ன

என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 7A என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு முழுவதும். அச்சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் 7A என அடையாளமிடப்பட்ட அச்சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : அதே காணியின் மேலே கூறப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டுகள் இல. 5 மற்றும் 6A என அடையாளமிடப்பட்டுள்ள பாகம் ; தெற்கு : B மற்றும் C என அடையாளமிடப்பட்டுள்ள 10 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 7B அத்துடன் ; மேற்கு : A மற்றும் B என அடையாளமிடப்பட்டுள்ள 10 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை. அத்துடன் அதிலுள்ள கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாமும் சேர்த்து அத்துடன் 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A எனும் இலக்க சொல்லப்பட்ட வரைபடத்தில் அடையாளமிடப்பட்டுள்ள அணுகுவீதி காணித்துண்டு E இன் மீதும் அதன்வழியாகவும் உள்ள நடந்து செல்லுதல், வாகன போக்குவரத்து இரண்டுக்குமான பாதை யுரிமையுடன் சேர்த்து. இந்தக்காணி C213/ 277 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

2. மேற்கூறப்பட்ட கந்து பலாத்த கோறளையில் நம்மல்கடுவ தற்போது அல்பிட்டிகந்த கிராமத்தில் அமைந்துள்ளதும் மேல் சிங்கபிட்டிய மறுபெயர் அக்கறாசியவத்தை என அழைக்கப்படுவது மான அம்முழுக்காணியிலுமிருந்து நாலு ஏக்கர்கள் மூன்று றூட்டுகள் இருபத்தொன்பது பேச்சுகள் (4ஏ. 3றூ. 29பே.) விஸ்தீரணம் கொண்டதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. எச். கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் 7A என அடையாளமிடப் பட்டதுமான அக்காணித்துண்டு முழுவதும். சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு 7C என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : B மற்றும் C என அடையாளமிடப்பட்டுள்ள 10 அடி அகல வீதிக்கான ஒதுக்குகை ; கிழக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்படடுள்ளதும் 7D என அடையாளமிடப்பட்டதுமான காணித்துண்டு ; தெற்கு : கக்கல்தோலஎல அத்துடன் ; மேற்கு : அதே காணியின், சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு 9 என அடையாளமிடப் பட்டதுமான பாகம் அதிலுள்ள கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்று மெல்லாமும் சேர்த்து. அத்துடன் C213/ 278 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

3. மேற்கூறப்பட்ட கந்துபலாத்த கோறளையில் றத்மல்கடுவ தற்போது அல்பிட்டிகந்த கிராமத்தில் அமைந்துள்ளதும் மேல்சிங்க பிட்டிய மறுபெயர் அக்கறாசியவத்தை என அழைக்கப்படுவதுமான அம்முழுக்காணியிலிருந்து நாலு ஏக்கர்கள் மூன்று றூட்டுகள் இருபத்தொன்பது பேர்ச்சுகள் (4ஏ.3றூ.29பே.) விஸ்தீரணம் கொண்டதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. எச். கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A எனும் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு இல. 7B என அடையாளமிடப்பட்டதுமான அக்காணி முழுவதும். அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் 7B என அடையாளமிடப்பட்ட சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : கதியால் வேலி மற்றும் எஸ். பீ. சமரக்கோன் மற்றும் ஏனையோரின் சிங்கப் பிட்டியவத்தை தேயிலை ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இல. 7D ; கிழக்கு : ஆற்றங்கரை மற்றும் எஸ். பீ. சமரக்கோன் மற்றும் ஏனையோரின் சிங்கப்பிட்டியவத்தை தேயிலை என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு அத்துடன் ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 7A என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு. அத்துடன் கண்டி காணிப்பதிவகத்தில் C 213/275 என்னும் தலைப்பின் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான காணி அதிலுள்ள கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றுமெல்லாமும் சேர்த்து.

4. இலங்கைக் குடியரசின் மத்திய மாகாணம் கண்டி மாவட்டம், உடுநுவரவின் கந்துபலாத்த கோறளையில் றத்மல்கடுவ தற்போது அல்பிட்டிகந்த கிராமத்தில் சின்னபிட்டிய மறுபெயர் அக்கறாசிய வத்தை என்னும் காணியிலிருந்து நாலு ஏக்கர்கள் மூன்று றூட்டுகள் இருபத்தொன்பது பேர்ச்சுகள் (4ஏ.3றூ.29பே.) விஸ்தீரணம் கொண்டதும் உரிமம் பெற்ற நில அளவையாளர் டி. எச். கருணாரத்ன என்பவரால் தயாரிக்கப்பட்ட 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A எனும் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டுள்ளதும் காணித்துண்டு இல. 7D என அடையாளமிடப்பட்டதுமான அக்காணித்துண்டு முழுவதும். அத்துடன் சொல்லப்பட்ட வரைபடத்தின் பிரகாரம் காணித்துண்டு 7D என அடையாளமிடப்பட்ட அச்சொல்லப்பட்ட காணித்துண்டின் எல்லைகள் - வடக்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு இல. 7B என அடையாளமிடப்பட்டுள்ள காணித் துண்டு ; கிழக்கு : கே. வின்சன்ற் பெரேராவின் அந்தோனிவத்தை தேயிலை ; தெற்கு : கக்கல்தெலஎல மற்றும் சின்ன பிட்டியவுக்குச் செல்லும் வீதி அத்துடன் ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடத்தில் காட்டப்பட்டுள்ள காணித்துண்டு 7C என அடையாளமிடப்பட்ட காணித்துண்டு. அத்துடன் அதிலுள்ள கட்டிடங்கள், பயிர்வகைகள் மற்றும் எல்லாமும் சேர்த்து. அத்துடன் 1981, மாச்சு 25 ஆந் திகதிய 1439A எனும் இலக்க வரைபடத்தில் அடையாளமிடப்பட்ட அணுகு வீதி காணித்துண்டு 7E இன் மீதும் அதன் வழியாகவும் உள்ள நடந்து செல்லுதல் வாகனப்போக்குவரத்து இரண்டுக்குமான பாதை யுரிமையுடன் சேர்த்து. C213/276 இன் கீழ் பதிவு செய்யப்பட்டது.

கம்பளை பிரசித்த நொத்தாரிசு ரி. பி. அபேக்கூன் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2002, ஒகத்து 28 ஆந் திகதிய 3822 ஆம் இலக்க ஈட்டு முறியின் அட்டவணையில் முழுமையாக விபரிக்கப் பட்டுள்ளனவும், சொல்லப்பட்ட 1439 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு இல. 8. மற்றும் காணித்துண்டு 7E மீதான பாதையுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/ 8

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்படுவது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்

(நுவரெலியா கிளை) - தொரைசாமி கனகராஜ்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 03 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் :-

"தொரைசாமி கனகராஜ் கடற்பாடுடையவராக, ஹட்டன் நஷனல் வங்கி பீ. எல். சி. சார்பில் கண்டி பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். பெரேராவினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, நவெம்பர் மாதம் 5 ஆந் திகதியிடப்பட்ட 1299 ஆம் இலக்க முறி மீதான, வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, மே 31 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு சொல்லப்பட்ட முறி மீது ஆறு இலட்சத்து இருபதாயிரத்து நூற்று அறுபது ரூபா எழுபத்து ஐந்து சதம் (ரூபா 6,20,160.75) கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்ட 1299 இலக்க முறி, மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 6,20,160.75 பணத்தொகையை 2009, யூன் 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஜ. டபிள்யூ. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

**அட்டவணை**

மேல் மாகாணம், நுவரெலிய மாவட்டம், வலப்பன பிரிவு உடப்பலாத்த கோறள, ஹல்கிறன்ஓய ராகல பசாரில் உள்ள 17 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தையும், தற்போது 94 ஆம் வரிமதிப்பீட்டி லக்கத்தையும் கொண்டுள்ள ஆதனம் உரிமம் பெற்ற நில அளவையாளர் எச். டி. சுமித்தினால் செல்லத்தக்க தாக்கப்பட்ட, 1948, மாச்சு 29 ஆந் திகதியிடப்பட்ட 137 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப் பட்டுள்ள காணித்துண்டு 36ஜீ என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : வீதி ; கிழக்கு : காணித்துண்டு 33எச் ; தெற்கு : காணித்துண்டுகள் 33யூ மற்றும் எல் 33 ஆர் ; மேற்கு : காணித்துண்டு 33 எப். அத்துடன் இரண்டு தசம் ஆறு நான்கு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 2.64பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம் நுவரெலிய மாவட்ட காணிப்பதிவகத்தில் பகுதி/ பக்கம் ஓ 176/177 இன் கீழ் பதிவு செய்யப்பட்டதுமான ஆதனம்.

மேற்சொல்லப்பட்ட காணி, மிக அண்மையில் மீள நில அளவை செய்யப்பட்டதன் விபரம் பின்வருமாறு :-

மத்திய மாகாணம், நுவரெலிய மாவட்டம், வலப்பன பிரதேச செயலாளர் பிரதேசத்தின் உடப்பலாத்த கோறளவின் ஹல்கிறனஓய ராகல பசாரில் உள்ள 94 ஆம் வரிமதிப்பீட்டிலக்க, உரிமம் பெற்ற நில அளவையாளர் ஐ. கொட்டம்பகேயினால். தயாரிக்கப்பட்ட 2007, செத்தெம்பர் 4 ஆந் திகதியிடப்பட்ட 693/1 ஆம் இலக்க வரைபடத்தில் விபரமாக விளக்கப்பட்டுள்ள காணித்துண்டு 01, என அடையாளம் இடப்பட்டதுமான அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள் : வடக்கு : ராகலை பசார் வீதி ; கிழக்கு : ராகலை பசார் வீதியின் 96 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் (1948 மாச்சு 29 ஆந் திகதியிடப்பட்ட 137 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 33 எச்) ; தெற்கு : ராகலை குறுக்கு வீதியின் 14 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் ; மேற்கு : ராகலை பசார் வீதியின் 92 ஆம் இலக்க வரிமதிப்பீட்டிலக்கத்துடன் (1948, மாச்சு 29 ஆந் திகதியிடப்பட்ட 137 ஆம் இலக்க வரைபடத்தில் உள்ள காணித்துண்டு 33எப்) அத்துடன் இரண்டு தசம் ஆறு நான்கு பேர்ச்சுகள் (0ஏ.0றூ.2.64பே.) விஸ்தீரணத்துடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாவற்றையும் கொண்ட ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/9

---

**ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ.**

(ஹட்டன் நஷனல் வங்கி லிமிட்டெட் என முன்பு அறியப்பட்ட)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின்கீழ் ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

(நீர்கொழும்பு கிளை) - சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்

ஹற்றன் நஷனல் வங்கி பீ.எல்.சீ. பணிப்பாளர்கள் சபையினால் 2009, யூலை மாதம் 23 ஆந் திகதி நடாத்தப்பட்ட கூட்டம் ஒன்றில் விசேடமாகவும், ஏகமனதாகவும் எடுக்கப்பட்ட தீர்மானம் -

"சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட் கடற்பாடு உடையதாகவும், லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே நந்தசேன அடகு வைத்தவராக, 2006, செத்தெம்பர் 14 ஆந் திகதியிடப்பட்ட அடகுமுறி இல. 1671 இன் முதலாவது அட்டவணையில் அடகு ஆதனம் தொடர்பாக மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமையவும், மற்றும் லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே சீத்தா பாலசூரிய மறுபெயர் சீதா ஹெற்றியாராச்சி அடகு வைத்தவராக 2006, செத்தெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட அடகு முறி இலக்கம் 1699 இன் இரண்டாவது அட்டவணையில் அடகு ஆதனம் தொடர்பாக மேலதிகமாக விபரிக்கப்பட்டதற்கு அமைவாகவும், நீர்கொழும்பு பிரசித்த நொத்தாரிசு ஜீ. எம். எம். பர்ணாண்டோவினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட இரு முறிகளும், சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு வழங்கப்பட்ட கடனை மீள பெறுவதற்காக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி தாபனத்திற்கு பாதுகாப்பு அடமானமாக வழங்கப்பட்டது.

முன் சொல்லப்பட்ட பாலசூரிய அப்புஹாமிலாகே நந்தசேன மற்றும் லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே சீத்தா பாலசூரிய

மறுபெயர் சீதா ஹெற்றியாராச்சி ஆகியோர் சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டின் உரித்தைக் கொண்ட உரிமையாளர்களாகவும், முன் சொல்லப்பட்ட சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டினை தமது கட்டுப்பாட்டின் கீழ் வைத்திருப்பவர்களாகவும், லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே சீத்தா பாலசூரிய மறுபெயர் சீதா ஹெற்றியாராச்சி ஆகியோர் சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) உரித்தைக் கொண்ட சகல பங்குகளையும் கொண்டுள்ளதுடன், சொல்லப்பட்ட சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டின் இயக்குனர்களாகவும் சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டின் நிர்வாகத்தைப் பெற்றுள்ளதுடன். மேற்சொல்லப்பட்ட லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே நந்தசேன மற்றும் லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே சீத்தா பாலசூரிய மறுபெயர் சீதா ஹெற்றியாராச்சி ஆகியோர்களே சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட்டிற்கு ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. யினால் வழங்கப்பட்ட நிதிக் கடன் கொடுப்பனவின் மூலம் உண்மையிலேயே பயனடைபவர்கள்.

சேன அன்ட் கொம்பனி (பிரைவேட்) லிமிட்டட் மற்றும் லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே நந்தசேன மற்றும் லொக்கு பாலசூரிய அப்புஹாமிலாகே சீத்தா பாலசூரிய மறுபெயர் சீதா ஹெற்றியாராச்சி ஆகியோர் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு மிகுதிக் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலாலும், 2009, யூன் மாதம் 30 ஆந் திகதியன்று உள்ளவாறாக ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ரூபா 1,07,76,902.54 கொண்ட பணத்தொகை ஒன்று தற்போது வருமதியாகவும் சேருமதியாகவும் உள்ளதாலும், அத்துடன் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி பணிப்பாளர்கள் சபையானது 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இதற்கான அட்டவணையில் முழுமையாக விபரிக்கப்பட்டனவும் சொல்லப்பட்ட 1671 மற்றும் 1699 ஆம் இலக்க முறிகள் மூலம் ஹற்றன் நஷனல் வங்கி பீ. எல். சி. தாபனத்திற்கு ஈடுவைக்கப்பட்டனவுமான ஆதனமும் வளவுகளும் சொல்லப்பட்ட ரூபா 10,776,902.54 பணத்தொகையை 2009, யூலை 01 ஆந் திகதியிலிருந்து விற்பனை நாள் வரை, அதன் மீதான மேலும் வட்டியுடனும், விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு இறுப்பனவுகள் ஆகியவற்றோடும் சேர்த்து (பெறப்பட்ட கொடுப்பனவுகள் எவையும் இருந்தால் அவற்றைக் கழித்து) அறவிடுவதற்காக, கொழும்பு உரிமம் பெற்ற ஏலவிற்பனையாளர் ஐ. டபிள்யு. ஜயசூரியவினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படுதல் வேண்டும் என இத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.''

### முதலாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (நீர்கொழும்பு பதிவகப் பிரிவிற்கு உட்பட்டது) நீர்கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட பெரியமுல்ல 4வது பிரிவில் உள்ள சிலாபம் வீதியின் 299 வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள அம்பகஹாவத்த என அழைக்கப்படும் காணியின் அம்பகஹாவத்தவின் மேற்குப் பகுதியின் மூன்றில் ஒரு பகுதியுடன் தற்போது ஒன்றிணைந்துள்ள காணியுடனான கட்டடங்கள் மற்றும் அத்துடனான எல்லாம், நில அளவையாளர் டபிள்யு. எஸ். ஏ. கொஸ்தாவினால் தயாரிக்கப்பட்ட 1986, நவெம்பர் 12 ஆந் திகதியிடப்பட்ட 3375 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டதும், பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டதும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : மேவின் பர்ணான்டோ மற்றும் பிரான்சிஸ் பர்ணான்டோ ஆகியோரின் காணி ; கிழக்கு : பிரான்சிஸ் பர்ணான்டோவின் காணி ஏ. சீ. ஜே. ஆப்டீனின் வாரிசுகளின் காணி மற்றும் தற்போது ஹசன் நெலுபாவின் காணி ; தெற்கு : சிலாபம் வீதி, மற்றும் தற்போது மேரி இந்திரா நிமாலி பீரிசின் காணி ; மேற்கு : மேரி நிமாலி பீரிசின் தற்போதைய காணி மற்றும் பேதுரு அப்புஹாமியின் காணி. அத்துடன் நீர்கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ/293/65 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட ஒரு றூட் மூன்று பேர்ச்சுகள் (0ஏ. 1றூ. 3பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

### இரண்டாவது அட்டவணை

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், (நீர்கொழும்பு பதிவகப் பிரிவிற்கு உட்பட்டது) நீர்கொழும்பு மாநகர சபையின் எல்லைக்கு உட்பட்ட ஹுனுபிட்டிய, 2வது பிரிவில் உள்ள பிரதான வீதியின் 363 வரிமதிப்பீட்டிலக்கத்தில் உள்ள ''மஹாகெதரவத்த'' என அழைக்கப்படும் காணியுடனான கட்டடங்கள் மற்றும் எல்லாம், நில அளவையாளர் ஆர். ஐ. பர்னான்டோவினால் தயாரிக்கப்பட்ட 1984, திசெம்பர் 29 ஆந் திகதியிடப்பட்ட 1782 ஆம் இலக்க வரைபடத்தில் விபரிக்கப்பட்டதும், அப்பிரிக்கப்பட்ட மற்றும் வரையறுக்கப்பட்டதுமான ஆதனத்தின் எல்லைகள்: வடக்கு : ரெக்ஸ் மாத்ஸ் மற்றும் கே. பீ. எல். பர்னான்டோ ஆகியோரின் காணி ; கிழக்கு : இந்த காணியின் பகுதி, அத்துடன் லைனற் மற்ஸ் மற்றும் டபிள்யு. எல். றொட்ரிக்கோவின் காணி ; தெற்கு : பிரதான வீதி ; மேற்கு : ரெக்ஸ் மாத்ஸ், அத்துடன் நீர்கொழும்பு மாவட்ட காணிப்பதிவகத்தில் ஏ/276/272 என்ற தலைப்பின் கீழ் பதிவுசெய்யப்பட்ட முப்பத்தி எட்டு பேர்ச்சுகள் (0ஏ. 0றூ. 38பே.) விஸ்தீரணம் கொண்டதுமான ஆதனம்.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

இந்திராணி குணசேகர,
பி. பொ. மு. (சட்டம்)/சபைச் செயலாளர்.

10-1048/10

---

### நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

ஜயசிங்க ஆராச்சிகே சகுந்தலா கஜவீர - மற்றும் பந்துல சரத் கஜவீர

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, ஓகத்து 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

''கொழும்பு 4, வஜிரா வீதி, 50-211 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த ஜயசிங்க ஆராச்சிகே சகுந்தலா கஜவீர என்பவர் (இதனகத்துப் பின்னர் ''ஈடுவைத்தவர்'' எனக் குறிப்பீடு செய்யப்படுவார்)

கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நிரோதா சுபேக்ஷாலி கலன்சூரிய அத்தாட்சிப்படுத்திய 2008, மே 06 ஆந் திகதி கொண்ட 933 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ் 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் சார்பில் ஜயசிங்க ஆராச்சிகே சகுந்தலா கஜவீர மற்றும் பந்துல சரத் கஜவீர ஆகியோரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2009.05.11 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது பதினைந்து இலட்சத்து எண்ணாயிரத்து ஐநூற்றி ஆறு ரூபா பதினைந்து சதம் (ரூபா 15,08,506.15) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

பதினைந்து இலட்சத்து எண்ணாயிரத்து ஐநூற்றி ஆறு ரூபா பதினைந்து சதத்தையும் (ரூபா 15,08,506.15) 2009.05.11 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் பதினான்கு இலட்சத்து நூற்றி அறுபத்து நாலு ரூபா தொண்ணூற்றியேழு சதத்தின்மீது (ரூபா 14,00,164.97) 2009.05.12 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 29% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் ஏலதாரர் திரு. இஹலகே கிறிஸ்டி அலஸ்டர் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன, பாணந்துறை தல்பிட்டி தேபெத்தயில் பாணந்துறை பிரதேச சபையின் எல்லைகளுக்குட்பட்ட வல்பொல பட்டியவில் அமைந்துள்ளதும் தவட்டகஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் வை. கருணாரத்ன கொஸ்தா தயாரித்த 2005, திசெம்பர் 17 ஆந் திகதிகொண்ட 3559 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு 01 என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : 905 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு D ; கிழக்கில் : 2446 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு H தற்பொழுது 15 அடி அகலப் பாதை மற்றும் துண்டு 2 ; தெற்கில் : துண்டு 2 மற்றும் கஹாட்டகஹாவத்த அல்லது மோதர ஆச்சாரிகேவத்த ; மேற்கில் : கஹாட்டகஹாவத்த அல்லது மோதர ஆச்சாரிகேவத்த மற்றும் 905 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு D என்பன அமைந்துள்ளன. 3559 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.) அதன்கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து.

மேற்படி 933 ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்ட வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10- 1062/1

---

### நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

விக்ரமகரலு ஆராச்சிகே அஞ்சலீனா பெர்னாண்டோ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, ஓகத்து 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"இல. 194/3, ஜயந்தி மாவத்தை, ஹிம்புட்டான அங்கொடை என்னும் முகவரியைச் சேர்ந்த விக்ரமகரலு ஆராச்சிகே அஞ்சலீனா பெர்னாண்டோ (இதனகத்துப்பின்னர் "ஈடுவைத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு நிரோதா சுபேக்ஷாலி கலன்சூரிய அத்தாட்சிப் படுத்திய 2007, செத்தெம்பர் 21 ஆந் திகதி கொண்ட 787 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ் 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் சார்பில் மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதிவசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடைமானமும் வைத்துள்ளார் ஆதலாலும் சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன் வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2009.05.11 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது பதினெட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து இருநூற்றி அறுபத்தொன்பது ரூபா அறுபத்தைந்து சதம் (ரூபா 18,71,269.65) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

பதினெட்டு இலட்சத்து எழுபத்தோராயிரத்து இருநூற்றி அறுபத்தொன்பது ரூபா அறுபத்தைந்து சதத்தையும் (ரூபா 18,71,269.65) 2009.05.11 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் பதினேழு இலட்சத்து இருபத்தாறாயிரத்து அறுநூற்றி நாற்பத்தைந்து ரூபா பதினாறு சதத்தின்மீது (ரூபா 17,26,645.16) 2009.05.12 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 26.25% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஏலதாரரைச் சேர்ந்த திரு. எம். டப்ளியூ. திரிவங்க சரித் சேனநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், ஹேவாகம் கோறளை, பல்லே பற்று கடுவெல பிரதேச சபை எல்லைக்குட்பட்ட (கடுவெல கூறு) வெலிவிட்டயில் அமைந்துள்ளதும் "கெனெய்யஹோரகும்புற" என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் எஸ். விக்ரமசிங்க தயாரித்த 2000, ஏப்பிறல் 30 ஆந் திகதிகொண்ட 1120/ 9000 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 6D என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுதும் மேற்படி துண்டு 6D என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டப்ளியூ. ஏ. ஜயரத்ன தயாரித்த 1551 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 5 ; கிழக்கில் : துண்டுகள் 6C மற்றும் 6I ; தெற்கில் : துண்டுகள் 6I மற்றும் 6B ; மேற்கில் : 694 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு B என்பன அமைந்துள்ளன. 1120/9000 ஆம் இலக்க வரைபடத்தின்படி இதன் பரப்பளவு பத்து பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 10பே.). இது கொழும்பு காணிப்பதிவகத்தில் L 89/227 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்படி 787 ஆம் இலக்க வரைபடத்தில் நன்கு விவரிக்கப்பட்ட வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியின்மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர்கள் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10- 1062/2

### வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் நிறைவேற்றட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

வர்ணகுலசூரிய பட்டபெந்திகே நளின் தரங்க

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின்படி பின்வரும் தீர்மானம் நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீ யின் (பதிவு இல. PQ 118) பணிப்பாளர் சபையால் 2009, ஒகத்து 31 ஆந் திகதி ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-

"துணகஹா, புஷ்பாராமயைச் சேர்ந்த வர்ணகுலசூரிய பட்ட பெந்திகே நளின் தரங்க (இதனகத்துப் பின்னர் "ஈடுவைத்தவர்" எனக் குறிப்பீடு செய்யப்படுவார்) கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு ஜெனிவீவ் பியூமினி ரணசிங்க அத்தாட்சிப்படுத்திய 2005, திசெம்பர் 14 ஆந் திகதி கொண்ட 375 ஆம் இலக்க ஈட்டு முறியின்மீது இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளையும் ஆதனத்தையும் வளவுகளையும் கொழும்பு 02, யூனியன் பிளேஸ் 242 ஆம் இலக்கத்தைச் சேர்ந்த (முன்னர் இல. 76, யோர்க் வீதி, கொழும்பு 01) வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீயின் சார்பில் (முன்னர் வரையறுக்கப்பட்ட நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி என அறியப்பட்டது) மேற்படி ஈடுவைத்தவரால் பெறப்பட்ட நிதி வசதிகளின் மீள் கொடுப்பனவுக்குப் பிணைப்பொறுப்பாக ஈடும் அடமானமும் வைத்துள்ளார் ஆதலாலும், சொல்லப்பட்ட ஈடுவைத்தவர் மேற்படி முறியினால் பெறப்பட்ட கடன்வசதிகளின் கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார் ஆதலால் இப்பொழுது 2009.05.22 ஆந் திகதியன்றுள்ளவாறு மேற்படி முறியின்மீது பதினான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நூற்றி நாற்பத்தொரு ரூபா ஐம்பத்தேழு சதம் (ரூபா 14,38,141.57) நேஷன்ஸ் ட்ரஸ்ட் வங்கி பிஎல்சீக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது ஆதலாலும்,

பதினான்கு இலட்சத்து முப்பத்தெட்டாயிரத்து நூற்றி நாற்பத்தொரு ரூபா ஐம்பத்தேழு சதத்தையும் (ரூபா 14,38,141.57) 2009.05.22 ஆந் திகதியன்றுள்ளவாறு வீடமைப்புக் கடன்மீது நிலுவையிலிருக்கும் முதல் பதின்மூன்று இலட்சத்து இருபத்தேழாயிரத்து இருநூற்றி நாற்பத்து நாலு ரூபா நாற்பத்தொரு சதத்தின்மீது (ரூபா 13,27,244.41) 2009.05.23 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 31.75% சதவீதப்படி மேலும் வட்டியையும் சார்புடைய நியதிச்சட்ட விதிப்பனவுகளையும் விளம்பரச் செலவையும் உறப்பட்ட வேறு எவையேனும் அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் (பெறப்பட்டிருப்பின்) அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக இதற்கான அட்டவணையில் நன்கு விவரிக்கப்படும் உரிமைகளும் ஆதனமும் வளவுகளும் திரிவங்க அன்ட் சேனநாயக ஏலதாரரைச் சேர்ந்த ஏலதாரர் திரு. இஹலகே கிறிஸ்டி அலெஸ்டர் பெரேரா என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்டமுன, பாணந்துறை தல்பிட்டி தேபெத்த, பாணந்துறை பிரதேச சபையினதும் வாதுவ, கெசெல்வத்த உப அலுவலகத்தினதும் எல்லைகளுக்குட்பட்ட தல்பிட்டிய கிராமத்தில் அமைந்துள்ளதும் திப்பெத்த வீதி 18/13 ஆம் வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் தெல்கஹாகுறுந்துவத்தயின் துண்டு 8C என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஏ.எம். ஆர். ஜயசேகர தயாரித்த 2005, செத்தெம்பர் 17 ஆந் திகதிகொண்ட 4716 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு A அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். மேற்படி துண்டு A என்பதற்கு எல்லைகளாக வடக்கில் : 2015 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டுகள் 8A மற்றும் 8B ; கிழக்கில் : வீதி (தனியார்) மற்றும் இதே காணியின் துண்டு 9 இன் எஞ்சிய பகுதி ; தெற்கில் : 2015 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள துண்டு 8 D ; மேற்கில் : வீதி (தற்போதுள்ளது) என்பன அமைந்துள்ளன. 4716ஆம் இலக்க வரைபடத்தின் இதன் பரப்பளவு இருபது பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 20பே.).

மேற்படி 375 ஆம் இலக்க ஈட்டு முறியில் விவரிக்கப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியிலும் அதன்மீதும் அதன் வழியாகவும் வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

தேஜா சில்வா,
கம்பனிச் செயலாளர்.

242, யூனியன் பிளேஸ்,
கொழும்பு 2.

10- 1062/3

---

### இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெடின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

#### சபையின் தீர்மானம்

"தெமோதரவைச் சேர்ந்த தஜுடீன் மொஹமட் அன்வர் என்பவர், இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசுமார் எச். எம். சீ. சீ. எச். மெனிக்கே, எஸ். வலத்தர மற்றும் என். ஆர். கருணானந்த என்போரினால் முறையே அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, திசெம்பர் 4, 2007, திசெம்பர் 14 மற்றும் 2008, சனவரி 7 ஆந் தேதிய 2292/ 1561/ 513 ஆம் இலக்கங்கொண்ட ஒருப்பாட்டு ஈட்டுமுறியின் மீது வருமதியாக வுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும், 2009, மே 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக ஒரு இலட்சத்து எழுபத்தோழாயிரத்து ஐம்பத்தி மூன்று ரூபா இருபத்திரெண்டு சதம் (ரூ. 177,053.22) கொண்ட தொகையும் 2001, யூன் 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒரு இலட்சத்து எழுபத்தேழா யிரத்து ஐம்பத்துமூன்று ரூபா இருபத்திரெண்டு தசம் (ரூபா 1,77,053.22) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியும் சொல்லப்பட்ட முறிமீது சொல்லப்பட்ட தஜுடீன் மொஹமட் அன்வர் என்பவரிடமிருந்து இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனை களுக்கிணங்க இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்து வதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவுத் தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஒரு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐம்பத்தி மூன்று ரூபா இருபத்திரெண்டு சதம் (ரூ. 1,77,053.22) கொண்ட தொகையும், 2009, யூன் 1ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஒரு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து ஐம்பத்துமூன்று ரூபா இருபத்திரெண்டு சதம் (ரூ. 1,77,053.22) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு இருபத்தொன்பது வீத (29%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 2292/1561/513 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டு முறிமூலம் இலங்கை வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின் மீதுள்ள வேறெல்லாமும், உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக்க என்பவரினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

#### 2292/1561/513 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணத்தின், பதுளை மாவட்டம், கும்பல்வெலக் கோறளை மதிக்கிந்தவிலுள்ள நெளல கிராமத்தில் அமைந்துள்ளதும், 35 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டதும், அஸ்வெத்துமே வத்த எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : கல் எல்லை ; கிழக்கில்: உக்குபண்டாவுக்குச் சொந்தமான 37 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட வீட்டின் பொதுச் சுவரும் சொல்லப்பட்ட பொதுச் சுவர் நெடுகிலுமான வேலியும் ; தெற்கில்: பிரதான வீதி மற்றும் ; மேற்கில் : எம். பி. தீபல் சில்வாவுக்குச் சொந்தமான அதேகாணியின் மீதிப்பாகத்தைத் தனிவேறாக்குகின்ற வேலியும் 33 ஆம் வரிமதிப் பீட்டிலக்கத்தைக்கொண்ட வீட்டின் பொதுச்சுவரும் ; பரப்பளவில் இது, அதன்மீதுள்ள வீட்டுடனும் எல்லாவற்றுடனும் வடக்கிலிருந்து தெற்கு வரை பிரதான வீதி வழியாக பன்னிரெண்டு அடி அகலத்தையும் நாற்பது அடி நீளத்தையும் (12 அடி × 40 அடி) கொண்டுள்ளதுடன், பதுளைக் காணிப் பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். பீ. குணரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006.12.17 ஆந் திகதிய 2728 ஆம் இலக்க வரைபடத்தில் மிக அண்மைக்காலத்திய மீள் நில அளவையின்படி, மேலேயுள்ள காணி பின்வருமாறு விவரிக்கப்படுகின்றது :-

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், கும்பல்வெலக் கோறளையிலுள்ள எல்ல பிரதேச செயலாளர் பிரிவினுள் கொட்டுவெலக் கிராமத்தில் (இகிவ2) நௌலவில் அமைந்துள்ளதும், 35 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்டதும், அஸ்வெத்துமே வத்த எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; அதன் எல்லைகள் பின்வருமாறு : வடக்கில் : பாதையும் எச். எம். அப்புஹாமியினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; கிழக்கில் : எச். எம். அப்புஹாமியினால் உரிமைகோரப்பட்ட காணி ; தெற்கில் : வீதி (எச்) மற்றும் எஸ். கான் என்பவரால் உரிமைகோரப்பட்ட காணி ; மற்றும் மேற்கில் : எஸ் கானினால் உரிமைகோரப்பட்ட காணி. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் மூன்று தசம் மூன்று இரண்டு பேர்ச்சுக்களை (0ஏ. 0றூ. 3.32பே.) கொண்டுள்ளது.

எல். ஜீ. பெரேரா,
முகாமைப் பணிப்பாளர்/பிரதான
நிறைவேற்றலுவலர்.

இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்,
இல. 73, டபிள்யூ. ஏ. டீ. ராமநாயக்க மாவத்தை,
கொழும்பு 2.

10-1073/1

---

### இ. அ. நி. கூ. வங்கி

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''பஸ்ஸறையைச் சேர்ந்தவரும் (இதனகத்துப்பின்னர் ''ஈடுவைத்தவர்'' என அழைக்கப்படுபவரும் குறிப்பீடு செய்யப்படுப வரும்), ''எக்செல் மோட்டார்ஸ்'' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனியுரிமையாளராகத் தொழில் கொண்டு நடாத்துகின்றவருமான கொக்கல கண்ஹேவகே கமணி ரஞ்ஜனி மற்றும் (இதனகத்துப்பின்னர் ''ஆயுள் அக்கறை வைத்திருப்பவர்'' என அழைக்கப்படுபவரும் குறிப்பீடு செய்யப்படுபவருமான) கொக்கல கண்ஹேவகே நந்தியாஸ் சில்வா என்போர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஐ.எம்.பீ. ஆனந்த என்பவரினால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007 ஆம் ஆண்டு யூலை மாதம் 19 ஆந் தேதிய 12291 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளனராதலாலும் மேற்கூறப்பட்ட 12291 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது 2009, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பதின்மூன்று இலட்சத்து நாற்பத் தேழாயிரத்து எண்ணூற்றி முப்பத்தொரு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 13,47,831.89) கொண்ட தொகையும் 2009, பெப்புருவரி 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பன்னிரெண்டு இலட்சம் ரூபா (ரூ.12,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியும் சொல்லப்பட்ட கொக்கல கண்ஹேவகே கமணி ரஞ்ஜனி மற்றும் கொக்கல கண்ஹேவகே நந்தியாஸ் சில்வா என்போரிடமிருந்து இ.அ.நி.கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதின்மூன்று இலட்சத்து நாற்பத்தேழாயிரத்து எண்ணூற்றி முப்பத்தொரு ரூபா எண்பத்தொன்பது சதம் (ரூ. 13,47,831.89) கொண்ட தொகையை 2009, பெப்புருவரி 1ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பன்னிரெண்டு இலட்சம் ரூபா (ரூ. 12,00,000) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சளபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 12291 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது.''

#### 12291 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், பஸ்ஸற கோரளை, பஸ்ஸறப் பிரிவிலுள்ள பஸ்ஸறப் பட்டினத்தில் அமைந்துள்ளதும், தம்மேரியாத் தோட்டத்தின் பாகம் என அழைக்கப்படுவதுமான காணி. அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : தம்மேரியாத் தோட்டத்தின் பாகம் ; கிழக்கில் : 279 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக் கொண்ட கடையைத் தனிவேறாக்குகின்ற சுவர் ; மற்றும் மேற்கில் : பஸ்ஸற - மட்டக்களப்பு பிரதான வீதி. பரப்பளவில் இது, அதன் மீதுள்ள 275 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட கட்டிடத்துடனும் வேறெல்லா வற்றுடனும் ஆறு பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.6பே.) கொண்டுள்ளதுடன், பதுளைக் காணிப்பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

உரிமம்பெற்ற நில அளவையாளர் எம். பீ. குணரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006, மாச்சு 18 ஆந் திகதிய 2458 ஆம் இலக்கத்தைக்கொண்ட நில அளவை வரைபடத்தின்படி மேற்கூறப்பட்ட ஆதனமும் வளவுகளும் பின்வருமாறு விவரிக்கப்படுகின்றன :

மேற்கூறப்பட்ட பஸ்ஸறப் பட்டினத்தில் அமைந்துள்ளதும், தம்மேரியாத் தோட்டத்தின் பாகமென அழைக்கப்படுவதும்

அறியப்படுவதும், மேற்கூறப்பட்ட 2458 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : விளையாட்டு மைதானமும் கனக சுந்தரத்தினால் உரிமைகோரப்பட்ட காணியும் ; கிழக்கில் : கனக சுந்தரத்தினால் உரிமை கோரப்பட்ட காணியும் பிரதான தெருவும் ; தெற்கில் : பிரதான தெரு ; மற்றும் மேற்கில் : குசும்யசலாலினால் உரிமைகோரப்பட்ட காணி. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள 275 ஆம் வரிமதிப்பீட்டிலக்கத்தைக்கொண்ட கட்டிடத்துடனும் வேறெல்லாவற்றுடனும் பூச்சியம் நான்கு தசம் மூன்று ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ.0றூ. 04.35பே.) கொண்டுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ.நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-1073/2

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

" 'மஹாவெல ஸ்டோர்ஸ்' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் தனியுரிமையாளராகத் தொழில்கொண்டு நடாத்துகின்ற எட்டம்பிட்டியாவைச் சேர்ந்த ஜயசிங்க முதியான்சேலாகே ஜயரத்ன என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ. எச். மெனிக்கே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 11 ஆந் தேதிய 1440 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 1440 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது 2009, சனவரி 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக நான்கு இலட்சத்து எழுபத்தி மூன்றாயிரத்து ஐந்நூற்றியெண்பத்தாறு ரூபா இருபத்திமூன்று சதம் (ரூ. 4,73,586.23) கொண்ட தொகையும் 2009, பெப்புருவரி 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை மூன்று இலட்சத்து முப்பத்தையாயிரத்து தொண்ணூற்றிமூன்று ரூபா இருபத்தேழு சதம் (ரூ. 3,35,093.27) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர் வான 0.5 சதவீதத்துக்கு மிகக் கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீதமாகவிருக்கும் (7%) வட்டியும் சொல்லப்பட்ட ஜயசிங்க முதியான்சேலாகே ஜயரத்ன என்பவரிடமிருந்து இ.அ.நி.கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 1440 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து நான்கு இலட்சத்து எழுபத்து மூன்றாயிரத்து ஐந்நூற்றி எண்பத்தாறு ரூபா இருபத்து மூன்று சதம் (ரூபா 4,73,586.23) கொண்ட தொகையை 2009, பெப்புருவரி 1ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை மூன்று இலட்சத்து முப்பத்தையாயிரத்து தொண்ணூற்று மூன்று ரூபா இருபத்தேழு சதம் (3,35,093.27) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீத (7%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1449 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டு முறிமூலம் இ. அ. நி. கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் ஷொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**1440 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம் ஹாலி-எல பிசெ பிரிவு, தெஹிவினிபலாத்த கோறளை, எட்டம்பிட்டிய பட்டினத்தில் அமைந்துள்ளதும், "தியபோலதென்னக்கும்புர" மற்றும் "தியவெல தென்னபட்டன" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதும், (உ. நி., எம். எவ். இஸ்மயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1186 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 7 இன் பாகமாகவுள்ளதும்), உரிமம்பெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. எஸ். அமரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006, ஏப்பிறல் 25 ஆந் திகதிய 1879 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும், அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : எல ; கிழக்கில்: எலவும் வடலியும் ; தெற்கில் : வீதிக்கான ஒதுக்கிடம் (பெருவழி) ; மற்றும் மேற்கில் : உ. நி. ஏ. ஏ. எஸ். அமரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1868 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1உம், உ. நி. எம். எவ். இஸ்மயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1186 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 6 உம் பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லா வற்றுடனும் பதினெட்டு தசம் ஐந்து பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.18.50பே.) கொண்டுள்ளது.

உரிமம்பெற்ற நில அளவையாளர் ஏ. ஏ. எஸ். அமரசேக்கர என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2006, ஏப்பிறல் 25 ஆந் திகதிய 1879 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 01 ஐக்

கொண்டுள்ள மேற்கூறப்பட்ட காணி, பின்வரும் காணியின் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்ட பாகமொன்றாகவுள்ளது :-

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டத்திலுள்ள உடுகிந்த தெஹிவினிபலாத்த கோறளை, எட்டம்பிட்டியாப் பட்டினத்தில் அமைந்துள்ளதும், ''தியபோலதென்னக்கும்புர'', ''தியவெல தென்னபட்டன'' மற்றும் ''தியபோலதென்ன மல்வத்த'' எனவழைக்கப் படுவதும் அறியப்படுவதும், உ. நி., எம். எவ். இஸ்மயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1979, செத்தெம்பர் 20 ஆந் திகதிய 1186 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 07 எனக் குறித்துக்காட்டப் பட்டதும், பின்வரும் எல்லைகளையுடையதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். வடக்கில்: எல ; கிழக்கில்: எலவும் வடலியும் ; தெற்கில் : வீதிக்கான ஒதுக்கிடம் (பெருவழி) ; மற்றும் மேற்கில் : உ. நி., எம். எவ். இஸ்மயில் என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1186 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 6 உம். பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் இருபத்தொன்பது தசம் எட்டு பூச்சியம் பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.29.80பே.) கொண்டுள்ளது. பதுளைக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ.நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-1073/3

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்களை அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

" 'ஹேமச்சந்திர ஹொட்டேல் அன்ட் பேக்கரி' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் உரிமையாண்மையில் தொழில்கொண்டு நடாத்துகின்ற வெல்லவாயவைச் சேர்ந்த அகரு கன்கானம்கே ஹேமச்சந்திர குலதிஸ்ஸ என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு பீ. ஆனந்த என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2001 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 2 ஆந் தேதிய 8591 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 8591 ஆம் இலக்கங் கொண்ட ஈட்டுமுறியின்மீது 2009, ஏப்பிறல் 30 ஆந் திகதி யன்றுள்ளவாறாக ஆறு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து இருநூற்றி முப்பத்தி நான்கு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 6,42,234.45) கொண்ட தொகையும் 2009, மே 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை நான்கு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து எட்டு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூ. 4,33,008.97) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதினான்கு சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (14%) வட்டியும் சொல்லப்பட்ட அகரு கன்கானம்கே ஹேமச்சந்திர குலதிஸ்ஸ என்பவரிடமிருந்து இ.அ.நி.கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது. 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட 8591 ஆம் இலக்க ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து ஆறு இலட்சத்து நாற்பத்திரெண்டாயிரத்து இருநூற்றிமுப்பத்தி நான்கு ரூபா நாற்பத்தைந்து சதம் (ரூ. 6,42,234.45) கொண்ட தொகையை 2009, மே 1ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை நான்கு இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து எட்டு ரூபா தொண்ணூற்றேழு சதம் (ரூ. 4,33,008.97) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதினான்கு சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (14%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 8591 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ.அ.நி.கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் எல். பி. சேனாநாயக்க அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**8591 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின் மொனறாகலை மாவட்டம் வெல்லவாய பிரிவிலுள்ள வெல்லவாயக் கோறளையில் வெல்லவாயவில் அமைந்துள்ளதும், ''தெய்யன்னேகும்புர'' எனவழைக்கப்படுவதும் உரிமம்பெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. வில்மட் சில்வா என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1985.10.19 ஆந் திகதிய 130 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் பீ1 எனக் குறித்துக்காட்டப் பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வருமாறு - வடக்கில் : மாலா ஆர; கிழக்கில்: அருவியும் வீதியும் ; தெற்கில் : காணித்துண்டம் பீ2 ; மற்றும் மேற்கில் : 1958 ஏ ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் ஏ. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள எல்லாவற்றுடனும் ஒரு றூட் முப்பது தசம் ஐந்து பேர்ச்சுக்களை (0ஏ.1றூ.30.5பே.) கொண்டுள்ளதுடன் மொனறாகலைக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

பாதையுரிமையின் விடயத்தில் - ஈடுபெறுநர், அவரது அதிதிகள். பொறியியலாளர்கள், ஒப்பந்தக்காரர்கள், கட்டிடக் கலைஞர்கள், வேலையாட்கள், சேவையாளர்கள், வாடகைக் குடியிருப்பாளர்கள், உரிமம் பெற்றவர்கள் மற்றும் வரவழைக்கப்பட்டோர் என்போருக்கு, இதன்பின்னர் எல்லா நேரங்களிலும், அவர்களின் விருப்பத்தின்படி, எத்தகையனவுமான எல்லா நோக்கங்களுக்காகவும், இரவில் அல்லது பகலில் நடந்து செல்லுதல் மூலம் அல்லது எத்தகையதுமான

வேறெவ்வகையிலும் போவதற்கும் திரும்பி வருவதற்கும், கடந்து செல்வதற்கும் மீளக் கடந்து செல்வதற்கும், பாரமேற்றப்பட்ட அல்லது பாரமேற்றப்படாத குதிரைகள், கால்நடைகள் அல்லது வேறு விலங்குகள், மோட்டார் கார்கள், மோட்டார் லொறிகள் மற்றும் ஒவ்வொரு வகையினவையுமான வேறு வாகனங்கள் என்பவற்றுடனோ அவையின்றியோ, இதன்கீழ் குறிப்பாக விபரிக்கப்பட்ட வீதிவழியிலும் அல்லது அது நெடுகிலும் அல்லது அதன்மீதும், எல்லா மற்றும் தனியான உரிமைகளுடனும் வழிகளுடனும் அனுகூலங்களுடனும் இணைந்துள்ளவற்றுடனும் அல்லது அவற்றோடு வழமையாக வைத்திருக்கப்பட்டவற்றுடனும் பயன்படுத்தப்பட்டவற்றுடனும் அல்லது துய்க்கப்பட்டவற்றுடனும் இடையறாது உட்செல்வதற்கும் வெளிச் செல்வதற்கும் அத்துடன் பிற்செல்வதற்குமான வழிக்கும் செல்வழிக்குமான முழுமையான, கட்டற்ற உரிமையும் சுதந்திரமும் அனுமதியும் மற்றும் அதிலும், அதன்மீதும் அத்துடன்/அல்லது அதுநெடுகிலும் மின்சார வடங்களையும் மேந்தலைக் கம்பிகளையும் வடிகாலமைப்பையும் வாயுவையும் நீர்க்குழாய்களையும் உபகரணங் களையும் எத்தகைய வகையினவையுமான வேறு உபாயங்களையும் இடுவதற்கும் முழுமையான, கட்டற்ற உரிமையும் சுதந்திரமும்.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ.நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-1073/4

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடனை அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

" 'மாதவி சலூன் அன்ட் கமியூனிக்கேஷன்' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் பதுளையில் பங்காண்மையில் தொழில்கொண்டு நடாத்துகின்ற ராஜகருண பந்துல பிரபாத் மற்றும் ராஜகருண அல்பிரெட் என்போர், இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு எச். எம். சீ. சீ. எச். மெனிக்கே என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2006 ஆம் ஆண்டு யூலை மாதம் 18 ஆந் தேதிய 1384 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் மேற்கூறப்பட்ட 1384 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது 2009, யூன் 30 ஆந் திகதி யன்றுள்ளவாறாக மூன்று இலட்சத்து எழுபத்திமூன்றாயிரத்து நூற்றித்தொண்ணூற்றொன்பது ரூபா அறுபது சதம் (ரூ. 3,73,199.60) கொண்ட தொகையும் 2009, யூலை 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொரு ரூபா (ரூ. 3,40,941) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு பதின்மூன்று சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (13%) வட்டியும் சொல்லப்பட்ட ராஜகருண பந்துல பிரபாத் மற்றும் ராஜகருண அல்பிரெட் என்போரிடமிருந்து இ.அ.நி.கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க, இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் அதற்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து மூன்று இலட்சத்து எழுபத்திமூன்றாயிரத்து நூற்றித்தொண்ணூற் றொன்பது ரூபா அறுபது சதம் (ரூ. 3,73,199.60) கொண்ட தொகையை 2009, யூலை 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை மூன்று இலட்சத்து நாற்பதாயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்தொரு ரூபா (ரூ. 3,40,941) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்குப் பதின்மூன்று சதவீதத்தில் கணக்கிடப்பட்ட (13%) வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 1384 ஆம் இலக்கங்கொண்ட, மேற்சொல்லப் பட்ட ஈட்டுமுறிமூலம் இ.அ.நி.கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. டபிள்யூ. ஜயதிலக்க அவர்களினால் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

**1384 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

ஊவா மாகாணத்தின் பதுளை மாவட்டம், பிந்தனையிலுள்ள மஹியங்கனை பிரதேச செயலாளர் பிரிவு, அளுத்நுவர உபபிரிவு, ரிதிகொட்டலியாகமவில் அமைந்துள்ளதும், "சமகிபுர வீடமைப்புத் திட்டத்தில்" "புஹுல்யாய" எனவழைக்கப்படுவதும் அறியப்படுவது மான காணியினதாய் நிலஅளவையாளர் தலைமையதிபதியினால் மெய்யென்றுறுதிப்படுத்தப்பட்டு 1987.11.19 ஆந் திகதியிடப்பட்ட ரீ. பீ. பீ. 57 இல் (குறை. வரைபடம் 02) காணித்துண்டம் இல. 2035 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டது மான அக்காணித்துண்டு அடங்கலும். அதன் எல்லைகள் பின்வரு மாறு - வடக்கில் : வரைபடம் இல. ரீ. பீ. பீ. 57 இலுள்ள காணித்துண்டம் 2032 ; கிழக்கில்: வரைபடம் இல. ரீ. பீ. பீ. 57 இலுள்ள காணித்துண்டம் 2034 ; தெற்கில் : வரைபடம் இல. ரீ. பீ. பீ. 57 இலுள்ள காணித்துண்டம் 2036 ; மற்றும் மேற்கில் : வரைபடம் இல. ரீ. பீ. பீ. 57 இலுள்ள காணித்துண்டம் 2026. பரப்பளவில் இது, அதன்மீதுள்ள கட்டிடத்துடனும் வேறெல்லாவற்றுடனும் பூச்சியம் தசம் பூச்சியம்

இரண்டு எட்டு ஏழு ஹெக்டேயர்களை (0.0287ஹெக்.) கொண்டுள்ள துடன், பதுளைக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ.நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-1073/5

---

**இ. அ. நி. கூ. வங்கி**

(இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்டது)

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-*

*" 'இரத்தினசிறி ஹாட்வெயார்' என்ற பெயர் மகுடத்தின்கீழும் குழுமத்தின்கீழும் இங்கிரியாவில் உரிமையாண்மைத் தொழிலொன்றைக் கொண்டு நடாத்துகின்றவரான கத்ரியாராச்சிகே இரத்தினசிறி நந்தன என்பவர், இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனம் என முன்னர் அறியப்பட்ட இ.அ.நி.கூ. வங்கி சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். பி. என். எஸ். கன்னங்கர என்பவரினால் இரண்டும் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005.05.26 ஆந் தேதிய 324 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீதும் 2005.04.01 ஆந் திகதிய 293 ஆம் இலக்கங்கொண்ட நான்காம் நிலை ஈட்டுமுறியின்மீதும், பிரசித்த நொத்தாரிசு பீ. டி. அபயவர்த்தன என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2003.02.21 ஆந் திகதிய 2068 ஆம் இலக்கங்கொண்ட மூன்றாம் நிலை ஈட்டுமுறியின்மீதும் வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் ; மேற்கூறப்பட்ட 324 ஆம், 293ஆம், 2068 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது 2008, திசெம்பர் 31 ஆந் திகதியன்றுள்ளவாறாக பதினான்கு இலட்சத்து எழுபத்தி ரெண்டாயிரத்து நாநூற்றிமுப்பது ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூ. 14,72,430.99) கொண்ட தொகையும் 2009, சனவரி 1 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை பத்து இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து முந்நூற்றிப்பதினான்கு ரூபா (ரூபா 10,33,314) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீதமாகவிருக்கும் (7%) வட்டியும் அத்துடன் இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்றிருப்பத்தாறு ரூபா (ரூபா 2,70,826) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேரத்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு நான்கு சதவீதமாகவிருக்கும் (4%) வட்டியும் அத்துடன் ஒரு இலட்சத்து எட்டாயிரத்து முந்நூற்றியிருப்பத்தாறு ரூபா (ரூ. 1,08.326) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு நான்கு சதவீதமாகவிருக்கும் (4%) வட்டியும் சொல்லப்பட்ட கத்திரியாராச்சிகே இரத்தினசிறி நந்தன என்பவரிடமிருந்து மேற்கூறப்பட்ட 324 ஆம், 293 ஆம், 2068 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின்மீது இ. அ. நி. கூ. வங்கிக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்றதாதலாலும், இ.அ.நி.கூ. வங்கியின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினாலும், பின்னர் திருத்தப்பட்டவாறான 1955 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தினாலும் சபைக்கு உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனைகளுக்கிணங்க இ.அ.நி.கூ. வங்கியினால் உறப்பட்ட, காணியையும் வளவுகளையும் விளம்பரப்படுத்துவதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள் மற்றும் வேறு இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதினான்கு இலட்சத்து எழுபத்திரெண்டாயிரத்து நாநூற்றி முப்பது ரூபா தொண்ணூற்றொன்பது சதம் (ரூ. 14,72,430.99) கொண்ட தொகையை 2009, சனவரி 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை பத்து இலட்சத்து முப்பத்திமூன்றாயிரத்து முந்நூற்றிப் பதினான்கு ரூபா (ரூ. 10,33,314) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு ஏழு சதவீதமாகவிருக்கும் (7%) வட்டியுடனும் அத்துடன் இரண்டு இலட்சத்து எழுபதாயிரத்து எண்ணூற்றியிருப்பத்தாறு ரூபா (ரூ. 2,70,826) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்கு மேல் (சஎபிவீ) ஆண்டொன்றிற்கு (4%) வட்டியுடனும், அத்துடன் ஒரு இலட்சத்து எட்டாயிரத்து முந்நூற்றியிருபத்தாறு ரூபா (ரூ. 1,08,326) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் மீளாயப்படும் சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்கு நான்கு சதவீதமாகவிருக்கும் (4%) வட்டியுடனும் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படா தெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 324 ஆம், 293 ஆம் 2068 ஆம் இலக்கம்கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிகள் மூலம் இ.அ.நி.கூ. வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட கீழே விபரிக்கப்படும் சொல்லப்பட்ட காணியும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் திருவாளர்கள் சொக்மன் அன்ட் சமரவிக்ரம அவர்களினால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."*

### 324 ஆம், 293 ஆம், 2068 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள ராய்கம் கோறளையின் உடுகஹாபத்துவிலுள்ள இங்கிரியாவில் ஊறுகல கிராமத்தில் தற்போது அமைந்துள்ளதும், உரிமம்பெற்ற நில அளவையாளர் ஜே. சோமசிறி என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2000.01.18 ஆந் திகதிய 801 ஆம் இலக்க வரைபடத்தில் காணித்துண்டம் இல. 1 எனக் குறித்துக்காட்டப்பட்டதும், புவக்வத்த எனவழைக்கப்பட்டு அறியப்படும் காணியின் பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் : அதன் எல்லைகள் பின்வருமாறு :- வடக்கில் : அதே காணியின் காணித்துண்டம் எவ் ; கிழக்கில்: காணித்துண்டம் பீ எனக் குறித்துக்காட்டப்பட்ட புவக்வத்த ; தெற்கில் : சொல்லப்பட்ட 801 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 2 மற்றும் ; மேற்கில் : பிரதான வீதி ; பரப்பளவில் இது, சொல்லப்பட்ட எல்லைகளினுள், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் பயிர்களுடனும் எல்லாவற்றுடனும் பத்துப் பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.10பே.) அல்லது 0.02530 ஹெக்டேயர்களைக் கொண்டுள்ளதுடன், ஹொரண காணிப்பதிவக அலுவலகத்தில் பதிவுசெய்யப்பட்டுமுள்ளது.

ஏ. என். பொன்சேக்கா,
பொது முகாமையாளர்.

இ.அ.நி.கூ. வங்கி,
இல. 73/5, காலி வீதி,
கொழும்பு 3.

10-1073/6

---

### இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் பற்றிய அறிவித்தல்*

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப் படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் நியதிகளின் படி, பின்வரும் தீர்மானமானது இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையினால் ஏகமனதாக நிறைவேற்றப் பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"குளியாப்பிட்டியைச் சேர்ந்த பத்தேகம லியன ஆராச்சிகே துலீப் அசேல பத்தேகம என்பவர், இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட் சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். என். சீ. ஜயக்கொடி என்பவரினால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2007, ஓகத்து மாதம் 8 ஆந் தேதிய 449 ஆம் இலக்கங்கொண்ட ஈட்டுமுறியின்மீது வருமதியாகவுள்ள கொடுப்பனவுகளைச் செலுத்துவதில் தவணை தவறியுள்ளாராதலாலும் ; 2009, யூன் 30 ஆந் திகதியன்றுள்ள வாறாக பதினொரு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து அறுநூற்றி முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 11,36,639.85) கொண்ட தொகையும் 2009, யூலை 01 ஆந் திகதி தொடக்கம் விற்பனைத் திகதிவரை ஒன்பது இலட்சத்து எண்பத்தோராயிரத்து முந்நூற்றியெழுபத்தொரு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 9,81,371.13) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்குப் பத்துச் சதவீதமாக (10%) இருக்கவேண்டியதும், ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் வங்கியினால் மீளாயப்படுவதுமான வீதத்திலான வட்டியும் சொல்லப்பட்ட முறிமீது சொல்லப்பட்ட பத்தேகம லியன ஆராச்சிகே துலீப் அசேல பத்தேகம என்பவரிடமிருந்து இ. அ. நி. கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்குச் சேருமதியாகவும் வருமதியாகவும் இருக்கின்ற தாதலாலும், இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டின் பணிப்பாளர் சபையானது, 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால், அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின்கீழ் 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளினால் கடன்கள் அறவிடப்படுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின் நியதிகளின்படி மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறியின் பொருத்தனை களுக்கிணங்க இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டினால் உறப்பட்ட, சொல்லப்பட்ட காணியையும் வளவுகளையும் அவற்றின்மீதுள்ள வேறெல்லாவற்றையும் விளம்பரப்படுத்து வதற்கான செலவுகள், விற்பதற்கான செலவுகள், செலவிடப்பட்ட மற்றெல்லாப் பணங்கள், செலவு தொகைகள், இறுப்பனவுகள் என்பவற்றோடு சேர்த்து பதினொரு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து அறுநூற்றி முப்பத்தொன்பது ரூபா எண்பத்தைந்து சதம் (ரூ. 11,36,639.85) கொண்ட தொகையை, 2009, யூலை 1 ஆந் தேதி தொடக்கம் விற்பனைத் தேதிவரை ஒன்பது இலட்சத்து எண்பத்தோராயிரத்து முந்நூற்றியெழுபத்தொரு ரூபா பதின்மூன்று சதம் (ரூ. 9,81,371.13) கொண்ட தொகைமீது ஆண்டொன்றுக்கு உயர்வான 0.5 சதவீதத்துக்கு மிகக்கிட்டியதாக நேர்த்தியாக்கப்பட்டு சராசரி எடைவீதமளிக்கப்பட்ட பிரதான கடன்கொடுக்கும் வீதத்துக்குமேல் (சஎபிவீ) ஆண்டொன்றுக்குப் பத்துச் சதவீதமாக (10%) இருக்கவேண்டியதும், ஒவ்வோராண்டும் சனவரி 1, ஏப்பிறல் 1, யூலை 1, ஒற்றோபர் 1 ஆகிய தேதிகளில் வங்கியினால் மீளாயப்படுவதுமான வீதத்திலான வட்டியுடன் அல்லது விற்பனை செய்யப்படும் நேரத்தில் செலுத்தப்படாதெஞ்சியுள்ள அதன் ஏதேனும் பாகத்தினை அறவிடுவதற்காக 449 ஆம் இலக்கங் கொண்ட, மேற்சொல்லப்பட்ட ஈட்டுமுறிமூலம் இ.அ.நி.கூ. வர்தன வங்கி லிமிட்டெட்டுக்கு ஈடுவைக்கப்பட்ட காணியும் வளவுகளும் அவற்றின்மீதுள்ள வேறெல்லாமும், உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய அவர்களினால் பகிரங்க ஏலமூலம் விற்பனை செய்யப்படவேண்டுமென இத்தால் தீர்மானிக்கின்றது."

### 449 ஆம் இலக்க ஈட்டுமுறிமூலம் ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

1. வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்திலுள்ள பிட்டிகல கோறளையின் மெதபலாத்தவில் துண்கண்ணாவக் கிராமத்தில் அமைந்துள்ளதும், துண்கண்ணாவத் தோட்டம் '1' பிரிவு

*எனவழைக்கப்படுவதும் அறியப்படுவதுமான காணியினதாய் உரிமம்பெற்ற நில அளவையாளர் டபிள்யூ. லக்ஷ்மன் எச். பர்ணாந்து என்பவரினால் தயாரிக்கப்பட்ட 2001, மாச்சு 6 ஆந் திகதிய 3697 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக்காட்டப்பட்டதும் காணித்துண்டம் 18 என அடையாளமிடப்பட்டப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணித்துண்டு அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 18 மேற்கூறப்பட்ட 3697 ஆம் இலக்க வரைபடத்தின்படி பினவரும் எல்லைகளையுடையது :- வடக்கில் : சொல்லப்பட்ட 3697 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 10 ; கிழக்கில்: சொல்லப்பட்ட 3697 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 19 ; தெற்கில் : நாத்தாண்டியாவிலிருந்து உடுபத்தாவ வரையிலான வீதி மற்றும் ; மேற்கில் : சொல்லப்பட்ட 3697 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 17 ; பரப்பளவில் இது, ஒன்றாக, இவ்வெல்லைகளினுள், அதன்மீதான மண், மரங்கள், பயிர்கள் மற்றும் எல்லாவற்றுடனும் பதினைந்து பேர்ச்சுக்களை (0ஏ.0றூ.15பே.) கொண்டுள்ளதுடன், மாரவிலக் காணிப்பதிவகத்தில் பதிவுசெய்யப் பட்டுமுள்ளது.*

3. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகொபற்று கோரளையில் வேவல்பொலயில் அமைந்த 'அலுதெனிய வத்த' கோங்கஹமுல வத்தயும் நுககஹமுல வத்தயும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டீ. எஸ். குணரத்ன தயாரித்த 1998.10.31 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 113/98 இல் விபரித்த பாதையொன்றாகிய துண்டு 05 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 03ம் ; கிழக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 06ம் ; தெற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 09ம் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 04 ம் எல்லைகளாகக் கொண்டு பதினாறு பேர்ச்சுகள் (0ஏ.0றூ.16பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் F 1131/83B இல் பதிவு செய்யப்பட்டது.

4. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், தம்பதெனி ஹத்பற்று ரெகொபற்று கோரளையில் வேவல்பொலயில் அமைந்த 'அலுதெனிய வத்த' கோங்கஹமுல வத்தயும் நுககஹமுல வத்தயும் என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. டீ. எஸ். குணரத்ன தயாரித்த 1998.10.31 ஆந் திகதியிட்ட வரைபடம் இல. 113/98 இல் விபரித்த பாதையொன்றாகிய துண்டு 08 என அடையாளமிட்ட பிரிக்கப்பட்ட குறித்த காணித்துண்டு வடக்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 03ம் ; கிழக்கில் : எச். எம். கருணாவதியினதும் ஏனையோரதும் காணியும் எச். எம். பண்டார மெனிகே மற்றும் எச். எம். விஜேரத்ன ஆகியோர் உரிமைகோரும் காணியும் ; தெற்கில் : ஏ. எம். குணதிலக்கவும் ஏனையோரும் உரிமைகோரும் வென்டிரிகேவத்தயும் ; மேற்கில் : மேற்குறிப்பிட்ட வரைபடத்தில் துண்டு 07 ம் எல்லைகளாகக் கொண்டு பத்து பேர்ச்சுகள் (0ஏ.0றூ.10பே.) விஸ்தீரணமுடைய காணியும் அங்கு அமைந்துள்ள சகலதும் ஆகும். இது குருநாகல் காணிப்பதிவகத்தில் F 1131/84B இல் பதிவு செய்யப்பட்டது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

ஐ. எம். எல். கருணாதிலக்க,
முகாமையாளர்.

இலங்கை வங்கி,
குளியாப்பிட்டிய கிளை.

10-1077

---

**செலான் வங்கி ப. வ. க.**

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(அபிவிருத்தி வங்கித் தொழில்) ((ஹிங்குரக்கொடை) கிளை) - கணக்கு இல. : 0510-06401070-101

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 08 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"ஹிங்குரக்கொடையைச் சேர்ந்த சந்திரகாந்தி ராஜபக்ஷ மற்றும் குருப்பு ஆரச்சிகே பந்துல பண்டார 'கடனெடுத்தவர்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எஸ். எஸ். ஹேவபத்திரண என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2000, நவெம்பர் 10 ஆந் திகதிய 50, பிரசித்த நொத்தாரிசு ஏ. எம். எம். ரவூப் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2005, பெப்புருவரி 28 ஆந் திகதிய 828 மற்றும் 2005, நவெம்பர் 23 ஆந் திகதிய 1048 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால் இப்பொழுது 2009, பெப்புருவரி 15 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது பன்னிரெண்டு இலட்சத்து ஒன்பதாயிரத்து அறுநூற்றுப் பதினாறு ரூபா அறுபத்தொரு சதம் (ரூ. 12,09,616.61) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்பட வேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 12,09,616.61 பணத்தொகையையும் 2009, பெப்புருவரி 16 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்தெட்டு சதவீதப்படி (38%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 50,828 மற்றும் 1048 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. ஐ. டபிள்யூ. ஜயசூரிய என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**அட்டவணை**

வடமத்திய மாகாணம், பொலன்னறுவை மாவட்டத்தில் பொலன்னறுவை மாவட்டப் பதிவுப் பிரிவினுள் ஹிங்குரக்கொட பிரதேச செயலாளர் பிரிவில் சிங்கள பத்துவவில் ஹிங்குரக்கொட கிராமத்தில் அமைந்துள்ள (நில அளவையாளர் நாயகத்தால் தயாரிக்கப்பட்ட இறுதிக் கொலனி வரைபடம் 132 இல் துண்டு 243 எனக் காட்டப்பட்ட) 'ஹிங்குரக்தமன' என்றழைக்கப்படும் காணிப் பங்கீட்டிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் இரந்ததிஸ்ஸ கொட்டம்பகேயால் தயாரிக்கப்பட்ட 2000.10.29 ஆந் திகதிய 105 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 1 எனக் குறிக்கப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள வதிவிட வீடு, மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். மேலே சொல்லப்பட்ட வரைபடத்தின்படி துண்டு 1 இன் எல்லைகள் - வடக்கு : FCP Po 132 இல் துண்டு 231 ; கிழக்கு: FCP Po 132 இல் துண்டு 221 ; தெற்கு : வீட்டிலிருந்து விமான நிலையத்துக்கு இட்டுச் செல்லும் வீதி ; மேற்கு : FCP Po 132 இல் துண்டு 242. இது இருபது தசம் ஆறு பேர்ச்சஸ் (0ஏ.0றூ.20.6பே.) அல்லது 0.052 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்டது.

இதனுடன் வரைபடம் இல. FCP Po 132 பிற்சேர்ப்பு இல. 05 இல் வழி உரிமையாகக் காட்டப்பட்ட துண்டு 226 இன் மேலாக வழி உரிமையாகப் பயன்படுத்தும் உரிமை கொண்டதாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-1083

---

## செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(கொள்ளுப்பிட்டி கிளை) - கணக்கு இல. : 0080-102496-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 03 இல் N(PVS) 4397 என்ற வியாபாரப் பதிவிலக்கம் கொண்டதாக 1982 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான வீ. ஐ. பீ. ருவர்ஸ் (பிரைவேட்) லமிட்டெட் மற்றும் முன்ச்னர் ஸ்ட்றாசே 35, 60329, பிராங்பூர்ட், ஜேர்மனியைச் சேர்ந்த கிறிஸ்ரியன்ஸ் கிறீஷ்பர் (காலஞ்சென்ற திரு. அன்ரன் எரல் ஹேரத் விக்கிரம ரத்னவின் மரணச் சொத்துக்கான மரணசாதன அதிகாரப் பத்திரம் கொண்டுள்ளவர்) 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு எம். ஈ. எஸ். பீரிஸ் என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 1997, ஒற்றோபர் 10 ஆந் திகதிய 226 ஆம் இலக்க முறியின்மீது வருமதியான கொடுப்பனவுத் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2002, ஏப்பிறல் 30 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறியின்மீது இருபத்தெட்டு இலட்சத்து ஐம்பத்துநான்காயிரத்து எழுபத்தைந்து ரூபா தொண்ணூற்று நான்கு சதம் (ரூ. 28,54,075.94) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 28,54,075.94 பணத்தொகையையும் 2002, மே 1 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரெண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 226 ஆம் இலக்க முறியினால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனம் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டத்தில் சல்பிட்டி கோறளேயின் பள்ளே பத்துவில் கொழும்பு மாநகர சபை எல்லைகளினுள் கிரிலப்பொனையில் அமைந்துள்ளதும் இப்போது இல. 78, ஸ்ட்ரட்போர்ட் அவெனியு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் புளுகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் (தொகுதி 64/289/79/269 இல் பதிவுசெய்யப்பட்ட கிருலப்பனை பதிவு வரைபடம் இல. 4 இல் துண்டு 83 A 1 இன் மீள் அளவீடும் உட்பிரிவுமாயுள்ளதும்) உத்தரவுபெற்ற நில அளவையாளர் டி. ஏ. வீரக்கோனால் தயாரிக்கப்பட்ட 1997, மாச்சு 24 ஆந் திகதிய 582 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 6319 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட வளவுக்கு எரித்தான ஏனைய எல்லா உரிமைகளுடனும் சேவகங்களுடனும். சொல்லப்பட்ட துண்டு 6319 இன் எல்லைகள் - வடக்கு : இல. 76, ஸ்டிரட்போர்ட் அவெனியு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட 83Q1 ; கிழக்கு: துண்டு 6322 ; தெற்கு: துண்டு 6320 ; மேற்கு : இல. 76, ஸ்ட்ரட்போர்ட் அவெனியு என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்ட துண்டு 83Q1. சொல்லப்பட்ட வரைபடத்தின்படி இது ஏழு தசம் நான்கு பூச்சியம் பேர்ச்சஸ் (0ஏ.0றூ.7.40பே.) அல்லது (0.01872 ஹெக்டயர்) விஸ்தீரணமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

சீ. கொட்டிகல,
சிரேஷ்ட பிரதிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-1084/1

---

## செலான் வங்கி ப. வ. க.

(2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது)

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட தீர்மானம்

(அபிவிருத்தி வங்கித்தொழில் கிளை) - கணக்கு இல. : 0860-041549-001

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்களை அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 8 ஆம் பிரிவின் கீழ், செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபையினால் 2009, செத்தெம்பர் மாதம் 23 ஆந் திகதி நடத்தப்பட்ட கூட்டத்தில்

பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

"கொழும்பு 07 இல் N(PBS) 1042 என்ற கூட்டிணைப்புச் சான்றிதழ் கொண்டதாக 1982 இன் 17 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின்கீழ் இலங்கையில் கூட்டிணைக்கப்பட்ட ஒரு கம்பனியான செலின்கோ சசெக்ஸ் எடியுகேஷனல் சேர்விசஸ் லிமிட்டெட் 'கடனெடுத்தவர்கள்' என்ற வகையில் செலான் வங்கி ப. வ. க. (2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்துக்கிணங்க PQ 9 குறிப்பீட்டின்கீழ் பதிவுசெய்யப்பட்டது) சார்பில் பிரசித்த நொத்தாரிசு ஜே. ஆர். புறொக்டர் என்பவரால் அத்தாட்சிப் படுத்தப்பட்ட 2007, மே 22 ஆந் திகதிய 207, 2007, யூன் 19 ஆந் திகதிய 214, 2007, ஒகத்து 13 ஆந் திகதிய 230, 2007, ஒகத்து 13 ஆந் திகதிய 229 மற்றும் பிரசித்த நொத்தாரிசு எல். பீ. என். த சில்வாவால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 2008, திசெம்பர் 23 ஆந் திகதிய 62 ஆம் இலக்க முறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளார்கள். ஆதலால், இப்பொழுது 2009, யூன் 16 ஆந் திகதியன்றுள்ளவாறு சொல்லப்பட்ட முறிகளின்மீது ஒன்பது கோடி எழுபத்திரண்டு இலட்சத்து இருபத்திரண்டாயிரத்து நானூற்று முப்பத்தொன்பது ரூபா எண்பத்தேழு சதம் (ரூ. 9,72,22,439.87) செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு உரியதாகச் செலுத்தப்படவேண்டியுள்ளது. ஆதலால் சொல்லப்பட்ட ரூபா 9,72,22,439.87 பணத் தொகையையும் 2009, யூன் 17 ஆந் திகதி முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு முப்பத்திரெண்டு சதவீதப்படி (32%) வட்டியையும் விளம்பரச் செலவுகளையும் உறப்பட்ட வேறு அறவீடுகளையும், அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்தும் அறவிடுவதற்காக, சொல்லப்பட்ட 207, 214, 230, 229 மற்றும் 62 ஆம் இலக்க முறிகளால் செலான் வங்கி ப. வ. கம்பனிக்கு ஈடுவைக்கப்பட்டதும் இதற்கான அட்டவணையில் மேலும் விவரிக்கப்படுவதுமான ஆதனங்கள் உத்தரவுபெற்ற ஏலதாரர் திரு. துசித கருணாரத்ன என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென செலான் வங்கி ப. வ. க. பணிப்பாளர் சபை 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க, வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தினால் உரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

### முதலாம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில் மாரவில பதிவுப் பிரிவினுள் பிட்டிகல் கோறளே தெற்கின் கம்மல் பத்துவில் கொலின்ஜாடியவில் அமைந்துள்ள மதன்கஹவத்த, அம்பகஹவத்த, மதன்கஹகொடபிமவசிய, தமின்னகஹவத்த, அம்பகஹவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்தும் ஏனைய காணிகளிலிருந்ததும் பிரித்துவரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. லக்ஷ்மன் எச். பர்ணாந்துவால் தயாரிக்கப்பட்ட 1997, ஒகத்து 29 ஆந் திகதிய 2098 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டுகள் 1 மற்றும் 2 எனக் குறிக்கப்பட்ட தொடர்ச்சியான காணிப்பங்கீடுகள் முழுவதும் அதன்கண்ணுள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். இதன் எல்லைகள் - வடக்கு : டபிள்யூ. எம். சுனில் பெரேராவின் காணி மற்றும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யு. எல். எச். பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 1164 இல் துண்டு 1 ; கிழக்கு: சொல்லப்பட்ட வரைபடம் இல. 1164 இல் துண்டுகள் 1, 10 மற்றும் 9, உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எல். எச். பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 1519 இல் துண்டு 2 ; தெற்கு: வீதி மற்றும் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எம். ஜி. எஸ். சமரதுங்கவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 3523 A இல் துண்டுகள் 7 மற்றும் 6 ; மேற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 3523 A இல் துண்டு 5 மற்றும் டபிள்யூ. எம். சுனில் பெரேராவின் காணி. சொல்லப்பட்ட 2098 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது இரண்டு றூட் முப்பத்தேழு பேர்ச்சஸ் (0ஏ.2றூ.37பே.) விஸ்தீரணம் கொண்டது.

அதனுடன் சொல்லப்பட்ட வரைபடம் இல. 1164 இல் துண்டு 10 இன் மேலாக வழி உரிமை கொண்டதாக.

### இரண்டாம் அட்டவணை

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில், கட்டுகம்பொல ஹத்பத்துவின் கட்டுகம்பொல கோறளே தெற்கில் இல. 695 மற்றும் 695/1, மாதம்பே வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கங்கள் கொண்டதாக குளியாப்பிட்டிய நகர சபை எல்லைகளினுள் கணதுல்லவில் அமைந்துள்ள கொடெல்லஹேன என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்துவரையறுக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எல். வீரவர்தனவால் தயாரிக்கப்பட்ட 1984, சனவரி 17 ஆந் திகதிய வரைபடம் இல. 3379ஏ இல் காட்டப்பட்ட பங்கீட்டின் மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. நவரத்னவால் தயாரிக்கப்பட்ட 2007.06.08 ஆந் திகதிய 5417 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : மாதம்பேயிலிருந்து குருநாகலுக்கான வீதி நெடுஞ்சாலை ; கிழக்கு: உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஆர். ஜயமன்னவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 2737 இல் துண்டு B எனக் காட்டப்பட்ட திரு. கருணாரத்னவின் காணி ; தெற்கு : உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எல். ஆர். ஜயமன்னவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 2737 இல் துண்டு F எனக் காட்டப்பட்ட எச். எம். சிறிமேவன் ஹேரத்தினதும் ஒ. எம். ஹிரந்தி பிரியங்கவினதும் காணி ; மேற்கு : முன்னர் வரைபடம் இல. 333905 இல் காட்டப்பட்ட ஜே. எல். வீரவர்தனவின் காணி இப்போது உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. நவரத்னவால் தயாரிக்கப்பட்ட 2007.06.08 ஆந் திகதிய வரைபடம் இல. 5417இல் காட்டப்பட்ட செலின்கோ சசெக்ஸ் எடியூகேஷனல் சேர்விசஸ் லிமிரெட்டின் ஆதனம். சொல்லப்பட்ட 5417 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது மூன்று றூட் (0ஏ.3றூ.0பே.) அல்லது 0.3035 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்டது.

2. வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டத்தில் கட்டுகம்பொல ஹத்பத்துவின் கட்டுகம்பொல கோறளே தெற்கில் இல. 699, மாதம்பே வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதாக குளியாப்பிட்டிய

நகரசபை எல்லைகளினுள் கணதுல்ல கிராமத்தில் அமைந்துள்ள திக்கும்புரேபில்லேவ மற்றும் மகாகும்புரேவத்த என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஜே. எல். வீரவர்தனவால் தயாரிக்கப்பட்ட 1976, சனவரி 30 ஆந் திகதிய வரைபடம் இல. 2271 இன் மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஆர். பி. நவரத்னவால் தயாரிக்கப்பட்ட 2007.06.08 ஆந் திகதிய 5416 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட காணியின் எல்லைகள் - வடக்கு : மாதம்பேயிலிருந்து குருநாகலுக்கான வீதி நெடுஞ்சாலை மற்றும் டி. டபிள்யூ. ஏ பிரகாரம் அப்புகாமியின் வயல் ; கிழக்கு : முன்னர் மகேஷ் பிரியா ஏக்கநாயக்கவினதும் எச். எம். பொடிமனிக்கே ஏக்கநாயக்கவினதும் காணி இப்போது உத்தரவுபெற்ற நில அளவையாளர் ஆர். பி. நவரத்னவால் தயாரிக்கப்பட்ட 2007.06.08 ஆந் திகதிய வரைபடம் இல. 5417 இல் காட்டப்பட்ட செலின்கோ சசெக்ஸ் எடியுகேஷனல் சேர்விசஸ் லிமிட்டெட்டின் ஆதனம், சிரிமேவன் ஹேரத்தினதும் ஓ. எம். ஹிரந்தி பிரியங்காவினதும் காணி. டாக்டர் பின்ரோவின் உரித்தாளிகளின் காணி ; தெற்கு : எமலினின் காணி ; மேற்கு : ராமலிங்கத்தின் வயல். பீ. எம். ஜொசபினாஹாமியின் வயல் மற்றும் டி. டபிள்யு. ஏ பிரகாரம் அப்புஹாமியின் வயல் மற்றும் என். ஏ. சிறிசேனவினதும் ஏனையோரினதும் காணி. சொல்லப்பட்ட 5416 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு ஏக்கர் இரண்டு றூட் பதின்மூன்று பேர்ச்சஸ் (1ஏ.2றூ.13பே.) விஸ்தீரணம் கொண்டது.

### மூன்றாம் அட்டவணை

ஊவா மாகாணம், பதுளை மாவட்டத்தில், பதுளை மாநகர சபை எல்லைகளினுள் பதுளுபிட்டியகமவில் அமைந்துள்ளதும் இல. 17, பதுளுபிட்டிய வீதி என்ற வரிமதிப்பீட்டிலக்கம் கொண்டதும் அம்பகஹகும்புர என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் (உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. பி. டபிள்யூ. வெல்கொல்லேயால் தயாரிக்கப்பட்ட 1959, மே 25 ஆந் திகதிய வரைபட இல. 1706 A இன் மீள் அளவீடாயுள்ள) உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஏ. ஏ. எஸ். அமரசேகரவால் தயாரிக்கப்பட்ட 2007.07.18 ஆந் திகதிய 2247 ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 1 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மரங்கள், தோப்புகள் மற்றும் ஏனைய எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 1 இன் எல்லைகள் வடக்கு : எச். ஆர். லிஸ்க்கின் தோட்டம் ; கிழக்கு : பாதை ; தெற்கு : பதுளுபிட்டிய வீதி ; மேற்கு : குமாரநாயகத்தின் தோட்டம். சொல்லப்பட்ட 2247 ஆம் இலக்க வரைபடத்தின்படி இது ஒரு றூட் பத்தொன்பது பேர்ச்சஸ் (0ஏ.1றூ.19பே.) விஸ்தீரணம் கொண்டது.

### நான்காம் அட்டவணை

வடமேல் மாகாணம், புத்தளம் மாவட்டத்தில், மாறவில பதிவுப் பிரிவினுள் பிட்டிகல் கோறளே தெற்கின் மெத பலாத்தவில் முதுகட்டுவ கிராமத்தில் அமைந்துள்ள போவத்த எஸ்ரேட் அல்லது முதுகட்டுயாய எஸ்டேட் என்றழைக்கப்படும் காணியிலிருந்து பிரித்து வரையறுக்கப்பட்டதும் உத்தரவுபெற்ற நில அளவையாளர் டபிள்யூ. எஸ். சுமித் ஏ. பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 2007, செத்தெம்பர் 10 ஆந் திகதிய 520 B ஆம் இலக்க வரைபடத்தில் காட்டப்பட்டதுமான துண்டு 01 எனக் குறிக்கப்பட்ட காணிப்பங்கீடு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள கட்டடங்கள், மரங்கள், தோப்புகள் மற்றும் எல்லாவற்றுடனும். சொல்லப்பட்ட துண்டு 01 இன் எல்லைகள் - வடக்கு: பீ. ஏ. டி. பீ. றெஜினோல்ட் அப்புஹாமி உரிமைகோரும் காணி, பன்சல்வத்த மற்றும் பீ. ஏ. டி. ஜோன் அப்புஹாமி உரிமைகோரும் காணி; கிழக்கு : உத்தரவுபெற்ற நில அளவையாளர் எம். ஜி. ஷெல்ரன் சமரதுங்கவால் தயாரிக்கப்பட்ட வரைபடம் இல. 4108பி இல் துண்டுகள் 01 மற்றும் 16, சொல்லப்பட்ட வரைபடம் இல. 502B இல் துண்டு 02 மற்றும் இதே காணியின் எஞ்சிய பங்கு ; தெற்கு : சொல்லப்பட்ட வரைபடம் இல. 502B இல் துண்டு 02 மற்றும் இதே காணியின் எஞ்சிய பங்கு ; மேற்கு : இதே காணியின் எஞ்சிய பங்கு. சொல்லப்பட்ட 520B ஆம் இலக்க வரைபடத்தின்படி ஐந்து ஏக்கர் (5ஏ.0றூ.0பே.) அல்லது 2.06993 ஹெக்டயர் விஸ்தீரணம் கொண்ட இதனுடன் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. எஸ். சுமித் ஏ. பர்னாந்துவால் தயாரிக்கப்பட்ட 2007, செத்தெம்பர் 10 ஆந் திகதிய சொல்லப்பட்ட வரைபடம் இல. 520 B இல் துண்டு இல. 02 எனக் குறிக்கப்பட்ட சொல்லப்பட்ட காணிக்கான ஆறு மீற்றர் அகலமான அணுகல் வழி கொண்டதாக.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

எம். கே. பிரேமதிலக,
உதவிப் பொது முகாமையாளர் - சட்டம்.

10-1084/ 2

---

### பேன் ஏசியா வங்கிக் கூட்டுத்தாபனம் ப. வ. க.

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் கீழ் வங்கிப் பணிப்பாளர்கள் சபையினால் நிறைவேற்றப்பட்ட தீர்மானம்*

வாடிக்கையாளரின் பெயர் : எம். பீ. சரத் சிசில் பெரேரா (மொறட்டுவை - கிளை)

2009.08.14 ஆந் திகதியன்று நடைபெற்ற, பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் பணிப்பாளர்கள் சபையின் கூட்டத்தில் பின்வருமாறு விசேடமாகவும் ஏகமனதாகவும் தீர்மானிக்கப்பட்டது:-

" மஹமரக்கல பட்டபெந்திகே சரத் சிசில் பெரேரா, முன்னர் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி மற்றும் வரையறுக்கப்பட்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் என அறியப்பட்ட பதிவு இல. பீகியூ 48 ஐக் கொண்ட பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. இன் சார்பில் பாணந்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு டபிள்யூ. பி. எஸ். பொன்சேக்கா அவர்களால் அத்தாட்சிப் படுத்தப்பட்டு 2007, ஓகத்து 24 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 3573 மற்றும் 2008, ஏப்பிறல் 21 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி இல. 3602 ஆகிய இரண்டினதும் மீதான வரவேண்டிய

கொடுப்பனவில் தவணைதவறியுள்ளாராதலாலும் ; பேன் ஏசியா வங்கி கூட்டுத்தாபனம் ப. வ. க. (இதனகத்துப்பின்னர் ''வங்கி'' என அழைக்கப்படும்) இற்கு சொல்லப்பட்ட முறிகள் மூலம் 2009.07.30 ஆந் திகதியிலிருந்து கொடுப்பனவு திகதிவரை-

(i) நான்கு இலட்சத்து நாற்பத்தொன்பது ஆயிரத்து இருநூற்று இருபத்தொன்பது ரூபா ஐம்பத்தெட்டு சதம் (ரூ. 4,49,229.58) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு முப்பது வீத (30%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது நான்கு இலட்சத்து அறுபத்தெண்ணாயிரத்து எண்ணூற்றொரு ரூபா எண்பத் தொன்பது சதம் (ரூபா 4,68,801.89) கொண்ட தொகை மற்றும் 2009.08.03 திகதி வரையான வட்டியும் ;

(ii) பத்து இலட்சத்து எண்ணாயிரத்து முந்நூற்று பதினான்கு ரூபா ஐம்பத்து நான்கு சதம் (ரூ. 10,08,314.54) கொண்ட தொகைமீது ஆண்டிற்கு முப்பது வீத (30%) வட்டியுடனும் சேர்த்து பணமுதல் கணக்கின்மீது பதினொரு இலட்சத்து முப்பத்தொன்பதாயிரத்து முப்பத்தைந்து ரூபா பதினொரு (ரூபா 11,39,035.11) கொண்ட தொகை மற்றும் 2009.08.03 ஆந் திகதி வரையான வட்டியும்.

தற்போது வரவேண்டியும் உரியதாகவுமுள்ளதாதலாலும் ;

சொல்லப்பட்ட முறி இலக்கங்கள் 3573 மற்றும் 3602 ஆகியவற்றின்மீது வரவேண்டிய சொல்லப்பட்ட தொகை பதினாறு இலட்சத்து ஏழாயிரத்து எண்ணூற்று முப்பத்தேழு ரூபா (ரூ. 16,07,837) ஐ 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 13 ஆம் பிரிவின்கீழ் அறவிடவேண்டிய பணங்கள் மற்றும் செலவுகள் மற்றும் மேற்கூறப்பட்ட திகதியிலிருந்து விற்பனை திகதி வரையான வட்டியுடனும் சேர்த்து அறவிடுவதற்காக, இத்துடனுள்ள அட்டவணையில் மேலும் முழுமையாக விவரிக்கப்பட்டுள்ள வங்கிக்கு ஈடுவைக்கப்பட்டுள்ள ஆதனத்தை பகிரங்க ஏலம்மூலம் விற்பனை செய்ய, சொல்லப்பட்ட 1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்க வங்கிகளினால் வழங்கப்பட்ட கடன்கள் அறவிடுதல் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் 4 ஆம் பிரிவின் பிரகாரம் கோட்டே, பிட்டகோட்டே, பெத்தகான வீதி, இல. 134 ஐச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் பீ. கே. ஈ. சேனாபதி அவர்களுக்கு அதிகாரமும் தத்துவமும் அளிக்கிறதென இத்தால் தீர்மானிக்கப் படுகின்றது.''

### அட்டவணை

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோரளை, பல்லே பற்று, மொறட்டுவை மாநகர சபை எல்லைகளுக்குள் மொறட்டுமுல்லை, 5ஆவது ஒழுங்கையில் அமைந்துள்ளதும் ''மிஸிகேவத்த'' என அழைக்கப்படும் காணியின் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் டபிள்யூ. டபிள்யூ. ஏ. பீ. மெண்டிஸ் அவர்களால் தயாரிக்கப்பட்டு 1990.08.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபடம் இல. 921பி இல் குறிப்பிடப்பட்டு துண்டு 3 என அடையாளமிடப்பட்டதுமான பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள எல்லாவற்றுடனும் சேர்த்து. சொல்லப்பட்ட துண்டு 3 இன் எல்லைகளாவன — வடக்கு : துண்டு இல. 2 ; கிழக்கு : 5ஆவது ஒழுங்கை ; தெற்கு : நிமல் ரோய் பெரேராவின் ஆதனம் ; மேற்கு : துண்டுகள் 4 மற்றும் 2. இது, சொல்லப்பட்ட வரைபடம் இல. 921பி இற்கமைய ஒன்பது தசம் இரண்டு சைவர் பேர்ச்சஸ் (0ஏ. 0றூ. 9.20பே.) விஸ்தீரணமுடையது ; கல்கிஸ்ஸை தற்போது நுகேகொடை, தெல்கந்த காணி பதிவகத்தில் எம் 1748/300 இல் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

மேற்கூறப்பட்ட வரைபடம் இல. 921பி இல் துண்டு 2 இன் மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

மனோநீதா ஆரியனந்த,
முகாமையாளர் - அறவீடுகள்.

10-1099

---

### மக்கள் வங்கி — ஹொறணைக் கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் திருத்தப்பட்ட வாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009, யூலை 31 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது:-

''விஜேமன்ன றபர் மில்ஸ் (பிறைவேட்) லிமிட்டெட் தாபனத்தினால் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். டி. சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 1996.04.25 ஆந் திகதி கொண்ட 696 ஆம் இலக்க முறியின் மீதும், களுத்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு பீ. ஆர். என். கே. பர்ணாந்து என்பவர் அத்தாட்சிப்படுத்திய 2009.05.28 ஆந் திகதிய 2930 ஆம் இலக்க வெளிப்படுத்துகை உறுதியுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2004.09.27 ஆந் திகதிய 1108 ஆம் இலக்க முறியின் மீதும், களுத்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். டி. சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2007.11.16 ஆந் திகதிய 2149 ஆம் இலக்க முறியின் மீதும் வருமதியான கொடுப்பனவில் தவணை தவறப்பட்டுள்ளது. ஆதலால் 696 ஆம் இலக்க முறியின் மீது ஆறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முந்நூற்று முப்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 6,36,330.25) கொண்ட தொகையையும், 1108 ஆம் இலக்க முறியின் மீது எட்டு இலட்சத்து முப்பத்து மூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு ரூபா நான்கு சதம் (ரூ. 8,33,881.04) கொண்ட தொகையும், 2149 ஆம் இலக்க முறியின் மீது முப்பத்தொரு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்றுரூபா இருபத்தாறு சதம் (ரூ. 31,63,753.26) கொண்ட தொகையையும் இப்பொழுது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் 2008.12.01 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 22.5 சதவீதத்தில் ஆறு இலட்சத்து முப்பத்தாறாயிரத்து முந்நூற்று முப்பது ரூபா இருபத்தைந்து சதம் (ரூ. 6,36,330.25) கொண்ட தொகையையும், 2008.12.20 ஆந் திகதியிலிருந்து ஆண்டொன்றுக்கு 19 சதவீதத்தில் எட்டு இலட்சத்து முப்பத்துமூவாயிரத்து எண்ணூற்று எண்பத்தொரு ரூபா நான்கு சதம் (ரூ. 8,33,881.04) கொண்ட தொகையும், 2008.11.01 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு இருபத்தேழு சதவீதத்தில் (27%) முப்பத்தொரு இலட்சத்து அறுபத்துமூவாயிரத்து எழுநூற்று ஐம்பத்து மூன்று இருபத்தாறு சதம் (ரூ. 31,63,753.26)

கொண்ட தொகையையும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் '29எல்' என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுத் தொகைகளையும் பணங்களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 696 ஆம், 1108 ஆம், 2149 ஆம் இலக்க முறிகளினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. சமன்மலி ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டத்திலுள்ள பாணந்துறைப் பதிவுப் பிரிவினுள் ராய்கம் கோறளையின் முன்வத்தபாகே பத்துவிலுள்ள வெலிக்கலவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லா வற்றுடனும் வெலிக்கல ஓவிட்ட எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் சிறி டீ. லியனசூரிய என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1987, ஓகத்து 4 ஆந் திகதிய 4095 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 2 என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப்பட்டதுமான அக்காணிப்பாகம் அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 2 பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 3 ; கிழக்கில் : வெலிக்கல வீதி ; தெற்கில் : அதே காணியின் பாகம் ; மற்றும் மேற்கில் : 4095 ஆம் இலக்க வரைபடத்திலுள்ள காணித்துண்டம் 1 உம் தங்கொல கும்புரவும் ஓவிட்டவும் ; பரப்பளவில் இது, ஒரு ஏக்கர் இருபத்தேழு தசம் இரண்டு ஐந்து பேர்ச்சஸ்கள் (1ஏ. 0று.27.25பே.) கொண்டுள்ளதுடன், ஹொறணைக் காணிப் பதிவகத்தில் பதிவு செய்யப்பட்டுமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
களுத்துறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம் (களுத்துறை),
இல. 341, காலி வீதி,
பாணந்துறை

10-1102

---

**மக்கள் வங்கி – பாணந்துறைப் பட்டினக் கிளை**

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2009, ஏப்பிறல் 24 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

"திரு. கோனியமலிமகே நெல்சன் பியசேன அப்பொன்சு, திருமதி அருமவடுகே யோலின், திரு. கோனியமலிமகே அருண ஷாந்த அப்பொன்சு என்போரினால் மக்கள் வங்கியின் சார்பில் களுத்துறையைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு எம். எஸ். டி. சில்வா அவர்களால் அத்தாட்சிப்படுத்திய 2008.03.26 ஆந் திகதி கொண்ட 2372 ஆம் இலக்க முறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறப்பட்டுள்ளது. ஆதலால் ஒன்பது இலட்சத்து அறுபத்தாறாயிரத்து இருநூற்று அறுபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 9,66,267.12) இப்பொழுது மேற்படி 2372 ஆம் இலக்க முறியின் மீது மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியு முள்ளது. ஆதலால் ஒன்பது இலட்சத்து அறுபத்தாறாயிரத்து இரு நூற்று அறுபத்தேழு ரூபா பன்னிரண்டு சதம் (ரூ. 9,66,267.12) கொண்ட தொகையையும் 2008.10.02 முதல் விற்பனைத் திகதி வரை ஆண்டொன்றுக்கு 27 சதவீதப்படியான வட்டியையும் மேற்படி மக்கள் வங்கிச் சட்டத்தின் '29எல்' என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலனவான செலவுத்தொகைகளையும் பணங் களையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 2372 ஆம் இலக்க முறியினால் மேற்படி வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. சமன்மலி ராமநாயக்க என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கின்றது."

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், களுத்துறை மாவட்டம், பாணந்துறை தொட்ட முனவின் பாணந்துறை தல்பிட்டி தெபத்தவிலுள்ள பாணந்துறை நகர சபை எல்லைகளினுள் வலனவில் அமைந்துள்ளதும், அதன்மீதுள்ள கட்டிடங்களுடனும் மரங்களுடனும் பயிர்களுடனும் வேறெல்லா வற்றுடனும் மாறகஹாவத்த எனவழைக்கப்படும் காணியினதாய் உரிமம் பெற்ற நிலஅளவையாளர் வை. கருணாரத்ன என்பவரினால் தயாரிக்கப்பட்ட 1985.03.23 ஆந் திகதிய 377 ஆம் இலக்க வரைபடத்தில் குறித்துக் காட்டப்பட்டதும், காணித்துண்டம் 1 இன் காணித்துண்டம் 1பீ என அடையாளமிடப்பட்டதும், பிரிக்கப்பட்டு வரையறுக்கப் பட்டதுமான அக்காணிப்பாகம் அடங்கலும் ; சொல்லப்பட்ட காணித்துண்டம் 1பீ பின்வரும் எல்லைகளையுடையது - வடக்கில் : காணித்துண்டம் 1ஏ ; கிழக்கில் : எஸ். கே. குணவர்த்தனாவின் வெலிபிட்டவத்தயும் ஸ்ரீ சந்திரசேக்கராவின் அதே காணியின் பாகமும்; தெற்கில் : சந்திரசேக்கராவின் அதே காணியின் பாகமும் 925 ஆம் இலக்கப் பிரிவிடுதல் வரைபடத்திலுள்ள அதேகாணியின் காணித் துண்டம் 2உம் ; மற்றும் மேற்கில் : கொழும்பிலிருந்து காலிவரையான

பெருவீதி. பரப்பளவில் இது. பதினொன்று தசம் ஏழு ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ.0றூ.11.75பே.) கொண்டுள்ளதுடன், பாணந்துறைக் காணிப் பதிவகத்தில் எவ் 499/41 என்பதன் கீழ் பதிவுசெய்யப் பட்டுமுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
களுத்துறை.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம் (களுத்துறை),
இல. 341, காலி வீதி,
பாணந்துறை.

10-1103

---

### மக்கள் வங்கி – அகங்கம கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழ் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 2007.12.17 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் பின்வரும் தீர்மானம் ஏகமனதாக நிறைவேறப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது :-*

*''காலி பிரசித்த நொத்தாரிசு எம். ஏ. டி. முதித பீரிஸ் என்பவரால் 1997.06.12 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தியதும் இலக்கம் 916, 1998.07.06 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப் படுத்தியதும் இலக்கம் 1484 மற்றும் 1999.11.12 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்திய இலக்கம் 2540 ஆம் இலக்க ஈட்டுமுறிகளின் மீது வருமதியான கொடுப்பனவில் ஸமரகோன் விதான முஹன்திரம்கே சந்திரதாஸ அல்விஸ் விஜேவிக்ரம அல்லது சன்திரதாஸ அல்விஸ் விஜேவிக்கிரம என்பவர் தவணை தவறியுள்ளார் என்பதால் இப்பொழுது மேற்படி முறியின்மீது ஐம்பத்தையாயிரம் ரூபாவும் (ரூ. 55,000), எழுபதாயிரம் ரூபாவும் (ரூ. 70,000) மற்றும் ஒரு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூறு ரூபாவும் (ரூ. 1,60,200) மக்கள் வங்கிக்குச் செலுத்தப்பட வேண்டியுள்ள படியால் 2007.06.05 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்திற்காக 20% வீதம் ஐம்பத்தையாயிரம் ரூபாவுக்கும் (ரூ. 55,000) 2007.06.07 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத் துக்கு 24% வீதம், எழுபதாயிரம் ரூபாவும் (ரூ. 70,000) மற்றும் 2007.02.15 ஆந் திகதியிலிருந்து ஒரு வருடத்துக்கு 24% வீதம், ஒரு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூறு ரூபா (ரூ. 1,60,200) மீது ஏலவிற்பனைத் திகதி வரை மேலும் வட்டியையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29எல் (29L) பிரிவின் கீழ் அறவிடப்படவேண்டிய பணத்தையும் அதன்பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து ஐம்பத்தையாயிரம் ரூபாவும் (ரூ. 55,000), எழுபதாயிரம் ரூபாவும் (ரூ. 70,000) மற்றும் ஒரு இலட்சத்து அறுபதாயிரத்து இருநூறு ரூபாவும் (ரூ. 1,60,200) அறவிடுவதற்காக உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் ஜீ. பீ. ஆனந்த என்பவரால் இலக்கம் 916, 1484 மற்றும் 2540 ஆம் இலக்க ஈட்டு முறிகளின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''*

#### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

தென் மாகாணம், காலி மாவட்டம், தல்பே பத்துவே, பியதிகம ஹதுவயில் அமைந்துள்ள தல்கஹாவத்த என்ற காணியில் மேற்குப் பகுதிக்கு வேறாக்கிய துண்டு இலக்கம் 1 க்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் டீ. யூ. அபேகுணவர்தன என்பவரால் 1985.04.24 ஆந் திகதி அளந்து தயாரிக்கப்பட்ட இலக்கம் 123 என்ற வரைடத்தின் பிரகாரம் எல்லைகள்- வடக்கிற்கு : கலகாவ வத்தையும் ; கிழக்கிற்கு : இக்காணியின் கிழக்குத்துண்டு வேறாகும் பாதையும் (மிக சரியாக வீதி மற்றும் தல்கஹாவத்தையும் ; தெற்கிற்கு : முதில்லாகஹ வத்தயும் ; மேற்கிற்கு : விதானகேய் வத்தயும் எல்லைகளாகும். இக்காணியின் எல்லைகளுக்குள் அமைந்துள்ள 1 றூட் பதினொன்று தசம் ஏழு இரண்டு பேர்ச்சஸ்கள் (0ஏ. 1றூ. 11.72பே.) விசாலமுடைய காணியும் காணியில் அமைந்துள்ள மரம், மட்டைகள், பழவகை, பயிர்கள், உட்பட மற்றும் அனைத்தும் ஆகும். இக்காணித்துண்டு காலி காணிப் பதிவகத்தில் இலக்கம் டி 711/238 இன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
காலி.

மக்கள் வங்கி,
பிரதேச தலைமை அலுவலகம்,
இலக்கம் 22, கீழ் டிக்சன் வீதி,
காலி.

10-1104

---

### மக்கள் வங்கி – திம்பிரிகஸ்யாய கிளை

*1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்*

*பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2008.10.24 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.*

*''திரு. டிக்ஷன் ஜயவீர, திருமதி வீரக்கொடி ஆராச்சிகே வஜிரா இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தரிசு திருமதி ஏ.ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க அத்தாட்சிப்*

படுத்திய 31.07.2006 ஆந் திகதி கொண்ட 7631 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால், இப்பொழுது மேற்படி 7631 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது பதினெட்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 18,77,675.51) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும் சேரவேண்டியு முள்ளது. ஆதலால் மேற்படி தொகையையும் பதினெட்டு இலட்சத்து எழுபத்தேழாயிரத்து அறுநூற்று எழுபத்தைந்து ரூபா ஐம்பத்தொரு சதம் (ரூ. 18,77,675.51) 01.05.2008 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 20.5 சதவீதப்படி மேலும் வட்டியையும் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணத்தொகையையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக கொழும்பைச் சேர்ந்த பிரசித்த நொத்தாரிசு திருமதி ஏ. ஏ. எஸ். டபிள்யூ. அமரசிங்க அத்தாட்சிப்படுத்திய 31.07.2006 ஆந் திகதி கொண்ட 7631 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ஈ. எஸ். ராமநாயக என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

### ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று, கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட நுகேகொடை ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையில் அமைந்துள்ளதும் தெல்கஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எச். டயஸ் அபேகுணவர்தன தயாரித்த 30.09.1989 ஆந் திகதி கொண்ட 791 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன் கண் அமைந்துள்ள மரங்கள், பயிர்ச்செய்கைகள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கில் : ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை, 182/2 ஆம் மற்றும் 82/2A வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; கிழக்கில் : இதே காணியின் துண்டு இல. 02 ; தெற்கில் : இதே காணியின் துண்டு இல. 05 ; மேற்கில் : ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை, 182/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு ஏழு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 07பே.) இது கல்கிசை காணிப் பதிவகத்தில் M 2862/37 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

2. மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், சல்பிட்டி கோறளை, பல்லே பற்று, கோட்டே ஸ்ரீ ஜயவர்தனபுர மாநகர சபை எல்லைகளுக்குட்பட்ட நுகேகொடை ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தையில் அமைந்துள்ளதும் தெல்கஹாவத்த என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் சீ. எச். டயஸ் அபேகுணவர்தன தயாரித்த 30.09.1989 ஆந் திகதி கொண்ட 791 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 04 என அடையாளமிடப்பட்டு பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும். இதற்கு எல்லைகளாக - வடக்கில் : காணித்துண்டு இல. 02 ; கிழக்கில் : காணித்துண்டு இல. 03 ; தெற்கில் : ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை 182/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; மேற்கில் : இதே காணியின் துண்டு இல. 05 என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பூச்சியம் தசம் ஆறு ஆறு பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 0.66பே.). பொது வழியுரிமையும் தண்ணீர், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளையும் பெறுவதற்கான பொது உரிமையுடன் சேர்த்து. இது கல்கிசை காணிப் பதிவகத்தில் 1750/113 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

3. மேற்கூறப்பட்ட காணியின் மேற்படி 791 ஆம் இலக்க வரைபடத்தில் துண்டு 05 என அடையாளமிடப்பட்டுள்ள காணித்துண்டு முழுவதும். இதற்கு எல்லைகளாக - வடக்கில் : காணித்துண்டு இல. 01 மற்றும் 02 ; கிழக்கில் : காணித்துண்டு இல. 04 மற்றும் ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை 182/3 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் ; ; தெற்கில் : வீதி ; மேற்கில் : ஸ்டேன்லி திலகரத்ன மாவத்தை 182/1 ஆம் வரிமதிப்பீட்டிலக்க வளவுகள் என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு இரண்டு தசம் ஏழு இரண்டு பர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 2.72பே.). பொது வழியுரிமையும் தண்ணீர், மின்சாரம், தொலைபேசி மற்றும் ஏனைய வசதிகளையும் பெறுவதற்கான உரிமையுடன் சேர்த்து. இது கல்கிசை காணிப் பதிவகத்தில் M1750/269 இல் பதிவு செய்யப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

உதவிப் பொது முகாமையாளர்,
மேற்கு வலயம் 01.

மக்கள் வங்கி,
வலயத் தலைமை அலுவலகம்,
(மேற்கு வலயம் 01),
இல. 11, டியூக் வீதி,
கொழும்பு 01.

10-1107

---

### மக்கள் வங்கி – யக்கல கிளை

1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்கச் சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க, மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின் கீழான தீர்மானம்

பின்வரும் தீர்மானம் மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபையால் 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தின் 29டி என்னும் பிரிவின்கீழ் 2008, ஒற்றோபர் 24 ஆந் திகதி நடைபெற்ற அதன் கூட்டத்தில் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

''ஜயசேகர முதலிகே அசோக சுவர்ணபாலி ஜயசேகர மற்றும் தனஹீன்கே பந்துல சுரவீர பெரேரா இருவரும் மக்கள் வங்கியின் சார்பில் கம்பஹாவைச் சேர்ந்த பிரசித்த நொத்தரிசு எஸ். பி. எல். விஜேசிறிவர்தன அத்தாட்சிப்படுத்திய 03.02.2005 ஆந் திகதி கொண்ட 9876 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது வருமதியான கொடுப்பனவில் தவணை தவறியுள்ளனர் ஆதலால், இப்பொழுது மேற்படி 9876 ஆம் இலக்க ஈட்டுமுறியின்மீது ஒரு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ரூபா முப்பத்தெட்டு சதம் (ரூ. 1,87,636.38) மக்கள் வங்கிக்கு வருமதியாகவும்

சேரவேண்டியுமுள்ளது. ஆதலால் ஒரு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ரூபா முப்பத்தெட்டு சதத்தையும் (ரூ. 1,87,636.38), ஒரு இலட்சத்து எண்பத்தேழாயிரத்து அறுநூற்று முப்பத்தாறு ரூபா முப்பத்தெட்டு சதத்தின் மீது (ரூ. 1,87,636.38) 01.06.2008 முதல் விற்பனைத் திகதிவரை ஆண்டொன்றுக்கு 20.25 சதவீதப்படி மேலும் வட்டியையும் விற்பனைச் செலவுகளையும் மக்கள் வங்கிச் சட்டத்தின் 29ஔ (29L) என்னும் பிரிவின் கீழ் அறவிடப்படற்பாலதான பணங்களையும் அதன் பின்னர் கொடுப்பனவுகள் எவையும் பெறப்பட்டிருப்பின் அவற்றைக் கழித்து அறவிடுவதற்காக மேற்படி 9876 ஆம் இலக்க ஈட்டுமுறியின் மீது மக்கள் வங்கிக்கு ஈடுவைக்கப்பட்ட ஆதனமும் வளவுகளும் கொழும்பைச் சேர்ந்த உத்தரவுபெற்ற ஏலதாரர் ராஜித எஸ். மஹாநாம என்பவரால் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்பட வேண்டுமென மக்கள் வங்கிப் பணிப்பாளர் சபை 1986 ஆம் ஆண்டின் 32 ஆம் இலக்க சட்டத்தால் திருத்தப்பட்டவாறான 1961 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மக்கள் வங்கிச் சட்டத்தால் அதற்குரித்தாக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் இத்தால் தீர்மானிக்கப்படுகின்றது.''

**ஈடுவைக்கப்பட்ட ஆதனத்தின் விவரணம்**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், அளுத்குறு கோறளை தாசிய பற்று மாரபெல கிராமத்தில் அமைந்துள்ளதும் மாரபொல எஸ்டேட் என அழைக்கப்படுவதுமான காணியில் உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. ஆர். பத்திராஜ தயாரித்த 26.04.1996 ஆந் திகதி கொண்ட 140 ஆம் இலக்க வரைபடத்தில் (உத்தரவுபெற்ற நிலஅளவையாளர் எஸ். பி. ஆர். பத்திராஜவினால் 24.08.1996 ஆந் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது) பிரித்து நிர்ணயிக்கப்பட்ட காணித்துண்டு முழுவதும் அதன்கண் அமைந்துள்ள மண், மரங்கள், பயிர்ச்செய்கைகள், கட்டிடங்கள் மற்றும் அனைத்தையும் சேர்த்து. இதற்கு எல்லைகளாக - வடக்கில் : துண்டு 76 ; கிழக்கில் : துண்டு 14 ; தெற்கில்: துண்டு 141 ; மேற்கில் : ஏ. டபிள்யூ. மைத்திரிரத்னவின் மரபுரிமையாளர்களின் இறப்பர் காணி என்பன அமைந்துள்ளன. இதன் பரப்பளவு பதினேழு தசம் ஐந்து பேர்ச்சஸ்கள் (0ஏ. 0றூ. 17.5பே.) இது கம்பஹா காணிப் பதிவகத்தில் A 222/222 என்பதன் கீழ் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேற்படி 1883 ஆம் இலக்க வரைபடத்தில் விவரிக்கப்பட்ட துண்டு 14 (9.75 மீட்டர் அகலம்) என்பதன் மீதான வழியுரிமையுடன் சேர்த்து. மேற்படி வரைபடத்தில் காட்டப்படும் வீதிக்கென ஒதுக்கப்பட்ட காணியின் மீதான வழியுரிமையுடன் சேர்த்து.

பணிப்பாளர் சபையின் கட்டளைப்படி,

பிரதேச முகாமையாளர்,
கம்பஹா.

மக்கள் வங்கி,
பிரதேசத் தலைமை அலுவலகம்,
கம்பஹா,
இல. 131, கண்டி வீதி,
பெலும்மஹார,
முதுன்கொட.

10-1108